தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

## மனத்தாழ்மை மற்றும் சாந்தம்



# மனத்தாழ்மை மற்றும் சாந்தம்

## 1.இவ்விரு கிறிஸ்துவ குணங்களுக்கு தேவன் எவ்விதத்தில் முக்கியத்துவம் கொடுக்கிறார்?

1 பேதுரு 5:5-6 “அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துக்கொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.”

1 பேதுரு 3:4 “அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது, அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.”

சங் 147:6 “கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார், துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்.”

சங் 149:4 “கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார், சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.”

**F 90[P1]:**

புது சிருஷ்டியாக அழைப்பு கொடுக்கப்படும் யாவருக்கும் - “மனத்தாழ்மையை” ஒரு காப்பீட்டு கட்டணமாக தேவன் தெளிவாக குறிப்பிட்டிருப்பதை இந்த வசனங்கள் காட்டுகிறது. ஆகவே - “ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.” என்று பேதுரு குறிப்பிடுகிறார். கிறிஸ்து இயேசு தன்னைத் தாழ்த்தி, அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராக இருந்தது போல, நாமும் அவருடைய மாதிரியை பின்பற்றும்படி பவுல் நமக்கு எழுதுகிறார். ஆகையால் தேவன் அவரை எல்லாவற்றிருக்கும் மேலாக உயர்த்தினார். ஆகவே - “பெருமையுள்ளவார்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.” என்று பேதுரு குறிப்பிடுகிறார். ஏனெனில், சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. உலகத்தில் பலவீனமானவைகளையும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களையும், அடிப்படையில் மனத்தாழ்மையுள்ளவர்களையும் தேவன் தெரிந்து கொண்டிருக்கிறார். தேவனை முழு மனதோடு நம்புவதற்கு கற்றுக்கொண்ட புதுசிருஷ்டிகள், அவருடைய கிருபை மட்டும் போதும் என்று எண்ணி, அதனால் பலப்பட்டு, தேவன் அழைப்பில் வெற்றிப்பெற்று உயர்த்தப்படுவார்கள்.

**E 254 [P2]:**

நாமும் முழு மனுக்குலமும் விரும்பும் காரியம் - ஆரோக்கியமான உள்ளம். ஆனால் பொதுவாக உலகத்தாரின் மனநிலைகளும், உடல் நிலைகளும் குணமடையும் காலம், குறிப்பாக ஆயிரவருட ஆட்சியில், பரம வைத்தியரின் கரங்களில் உள்ளது. அந்தக் காலமும், அந்தக் காலத்தின் ஆசீர்வாதங்களும், விடுதலையும் தேவன் குறித்த காலம்

வரும் வரையில் செயல்படாது. இதற்கு இடையில், சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்ட சபை, அவருடைய ஆண்டவர் மூலமாகவும், அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும், அவருடைய பரிசுத்த ஆவியைப் பெறும். அதாவது குமாரன் பெற்றிருக்கும், அதே பிதாவின் சிந்தையை இவர்களும் பெறுவார்கள். இவ்வாறாக, தேவ ஆவியை பெற்ற ஒவ்வொரு அங்கத்தினர்களும், இந்த முழுமனுக்குலத்தின் பொதுவாக பிரச்சனைகளையும், உபத்திரவங்களையும், இயற்கையான மனச்சோர்வுகளையும் நீக்குவதற்கு தாங்கள் பெற்றச் சிறப்புரிமையை முழுமையாக பயன்படுத்துவார்கள். "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு (மாம்சத்திற்குறியவைகளை அல்ல, ஆவிக்குரியவைகளை) மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" (ரோமர் 12:3) என்று அப்போஸ்தலன் மூலமாக தேவனுடைய வார்த்தைகள் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அநேகரை ஜெயித்து, தாங்கள் பெற்ற தாலந்துகளுக்கு ஏற்றவாறு, செயல்பட்டு, நல்ல ஆவியை இருதயத்தில் வளர்த்து, தங்களுக்குள் பெருமையை கீழ்ப்படுத்தி, தங்களுடைய மேட்டிமையான எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, "ஆவியில் எளிமையானவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்ற எஜமானனுடைய வார்த்தைகளின்படி முழுமையாக வாழ்வதற்கு, அநேக காரியங்களில் போராட வேண்டியதாக இருக்கிறது. அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளையும் இதை வலியுறுத்துகிறது. "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." (யாக் 4:6) "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேது 5:5,6)

**A83 [P2]:**

மேலும், அநேக அடிகளையும், உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்து, செப்பனிடப்பட்டு, நமக்காக நம்முடைய ஆண்டவர் தன்னுடைய ஜீவனை கொடுத்ததை மனதில் வைத்தவர்களாக, எந்தவிதமான சுயநலத்திற்கும் இடமில்லாமல், அவருடைய குணங்களை நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய ஆண்டவரை மாதிரியாகக் கொண்டு நாம் பிரதிபலித்து, அவரை போல் மறுரூபமாக வேண்டும். சுயநலமான எந்த நோக்கத்திற்காகவும் நாம் அவருடைய சித்தத்தை நமக்குள் நிறைவேற்றாதபடிக்கு, நாம் மிகவும் மனத்தாழ்மையுள்ளவர்களாக தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். இப்படியாக, நாம் அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருந்தால், நம்முடைய தலையாகிய கிறிஸ்துவை உயர்த்தினது போல நம்மையும் நிச்சயமாக உயர்த்துவார். (1பேது 5:5,6. பிலி 2:8,9)

**R 1920[col. 2P2-4]:**

மிக குறைவான தாலந்துகளை பெற்றிருக்கும், வலுவற்ற கருவிகளையும் அவர் ஆண்டவரின் பணியில், பயன்படுத்துவதினால், அவர்களை மிகவும் உயர்ந்தநிலைக்கு உயர்த்தப்பட்டு, அதிகமான ஆசீர்வாதங்களைப்பெறுகிறார்கள். ஆனால் சில நேரங்களில் அதே ஆசீர்வாதம் அவர்களுக்குள் பெருமையையும், வீண் புகழ்ச்சியையும் வளரக்கூடிய சாபமாக மாறிவிடுகிறது. இது ஒரு கேடான மாம்ச சிந்தைக்குரிய இயல்பாக இருக்கிறது. நம்முடைய எதிராளி மிகவும் தந்திரமாக இந்தக் காரியத்தை அவனுக்கு சாதகமாக

பயன்படுத்திவிடுகிறான். அதற்குப்பின், பொருளாதாரத்தில் குறைவுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, அறிவிலும், ஞானத்திலும் குறைவுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, தேவனுடைய வார்த்தைகளில் குறைவுள்ளவர்களுக்கு தேவன் கொடுத்த வசனங்களே அவர்களுக்கு தடுக்கலின் கல்லாக மாறிவிடுகிறது. "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது" (லூக் 6:20) என்ற ஆண்டவரின் வார்த்தைகளை அவர்கள் மறந்துவிட்டிருக்கலாம் அல்லது "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" என்ற வசனத்தை மறந்திருக்கலாம். மேலும், அறியாமையில் உள்ளவர்கள். அறிவைப் பெற்றவர்கள், தரித்திரர்கள், ஐசுவரியவான்கள் மற்றும் அனைவருமே தங்களுடைய மாம்ச சிந்தையில் மேட்டிமையான எண்ணங்கள் கொண்டு விடுவார்கள் என்பதையும் மறந்துவிட்டார்கள். "ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" (கலா 6:3) விசேஷமாக கிறிஸ்துவ குணலட்சனங்கள் குறைவுப்படும் இடங்களில், இப்படிப்பட்ட வஞ்சனைகள் நடைபெறலாம். சத்தியத்தின் அறிவினால் ஆசீர்வதிக்கப்பட்ட ஐசுவரியவான்களானாலும் சரி தரித்திரரானாலும் சரி "இவர்களுக்குள் "மனமேட்டிமையும்" வளருவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதினால், தாழ்மையையும், சாந்தத்தையும் தங்களுக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும். மேலும் "எதிர்பேசுபவர்களை சத்தியத்தை அறியும்படி" மனத்தாழ்மையுள்ளவர்களாகவும், சாந்தத்தோடும் மிக பொறுமையுடனும் நடந்துகொள்ளவேண்டும். (எபே 4:2. 11தீமோ 2:25)

ஆகவே எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நம்முடைய பணிவை காத்துக்கொள்ளவேண்டும். நாம் நம்முடைய பார்வையில் சிறியவர்களாக தோன்றினால் மட்டுமே தேவன் நம்மை பாதுகாப்போடு பயன்படுத்த முடியும், மேலும் நேர்மை மற்றும் விசுவாசத்திற்கான எல்லா சோதனைகளுக்கும் தேவன் நம்மை மறைத்து கொள்வதில்லை.

ஆகவே இன்றைக்கு நீங்கள் செய்த கிரியைக்கு தேவன் உங்களை சற்று உயர்த்தினால் அல்லது உங்களது பணியில் பெற்ற வெற்றிக்கு கொஞ்சம் ஊக்கம் அளித்தால் - இதற்கு நீங்கள் அபாத்திரர் என்றும், தேவனால் அங்கீகரிப்பதற்கு உங்கள் வேலை அபூரணமானது என்பதையும் முழுமையாக மனதில் கொண்டு அதை சந்தோஷத்துடனும், மனத்தாழ்மையுடனும் பெற்றுக்கொண்டு தடுமாறக்கூடிய உங்கள் மாம்ச பலவீனத்தை சீராக்கிக்கொள்ள. நாளைய தினத்திற்கு தேவைப்பட்ட மனத்தாழ்மையையும், தன்னடக்கத்தையும் பெற்றுக்கொள்ள ஆயத்தப்பட வேண்டும். நேற்றைய தினத்தில் பெற்ற வெற்றி, இன்றைய தினம் உங்களை கோபத்திற்குள்ளாக்காதபடி எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் நீங்கள் இந்நாள் வரைக்கும், ஆவிக்குரிய வகையில் முழுமையாக வளர்ச்சியடையவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. சத்தியத்தின் எக்காளம் நமக்குள் எவ்வளவாக இருந்தாலும், மாயையின் மத்தியில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவங்களை நாமும் பொறுமையோடே பெற்றுக்கொள்ளுவோம். "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை, ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்-கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." - பிலி 4:11-13.

தம்முடைய ஜனங்கள் பெருமை கொள்ளாதபடியும், சுயநலமற்றவர்களாக இருக்கும்படி தேவன் மிகுந்த ஜாக்கிரதையோடு அவருடைய ஜனங்களை வழிநடத்துவதை நாம் காணலாம். தேவன் இஸ்ரயேலரை அவருடைய விசேஷித்த ஜனங்களாக தெரிந்துக்கொண்டபின் அவர்களை நானூறு வருடங்கள் அடிமையாக அனுமதித்தார். அதற்குப் பின் அவருடைய பலத்த கரத்தால் அவர்களை மீட்டு, வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு அழைத்து வந்தார். தேவனால் தேர்வு செய்யப்பட்ட இரட்சகராம் மோசே, பிறப்பினால் மிக எளியவராக இருந்தார். அவர் திக்கு வாயனாக இருந்தபடியால் ஆரோன் அவருக்கு உதவ வேண்டியதாக இருந்தது. அதே போல் பவுல் மூன்றுமுறை ஜெபித்த போதும் தேவன் அவருடைய பலவீனத்தை போக்காமல், மாம்சத்தில் அதை அனுமதித்து "என் கிருபை உனக்கு போதும், உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாக விளங்கும்" என்று தேவன் பதில் அளித்தார். (அதாவது, அவருடைய பலம், அபூரணமான மண்பாண்டத்தில் கிரியை செய்யும் போது, நிச்சயமாக இது தேவனுடைய செயல் என்று மனிதர்களால் உணரமுடியும். ஒரு வேளை பவுல் எல்லாவற்றிலும் திறமை வாய்ந்தவராக இருந்திருந்தால், நிச்சயமாக அனைவரும் பவுலின் திறமையைக் குறித்தே புகழ்ந்திருப்பார்கள். அதே நேரத்தில் தேவனுடைய வல்லமை - பவுலின் வழியாக செயல்படும் போது தேவனுடைய கிரியைகள் மகிமைப்படுத்தப்பட்டு, அவருடைய கிருபைக்கான சாட்சி அதிக கனம் பெறும். இப்படியாக, தேவன் தம்முடைய கிருபையையும், மகிமையையும் விளங்கச் செய்வதற்கு, பலவீனமும், மனத்தாழ்மையுமாக தங்களையே முழுமையாக அர்ப்பணிப்பவர்களை பயன்படுத்துகிறார்.)

**R 2700 [ col. 1 last P]:**

இது இயல்பான மனிதனுக்கு மட்டும் அல்ல, தேவனோடு நல்லுறவு கொள்ள விரும்பும் யாவருக்கும் பொருந்தும். மேலும் "புது சிருஷ்டிகளுக்கு" தங்களுடைய முழு வாழ்க்கை பயணத்திற்கும் இந்தப்பாடம் மிகவும் அவசியம். பெருமைக்காகவும், சுயநலத்திற்காகவும் அல்ல மாறாக மிகுந்த மனத்தாழ்மையினால் மட்டுமே தெய்வீக கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். தேவன் பெருமையுள்ளவர்களுக்கும், தங்களைக் குறித்து மேன்மை பாராட்டுபவர்களுக்கும் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். தேவனுடைய கிருபையை மனத்தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே பெற முடியும் என்ற முக்கியத்துவத்தை யாக்கோபு இங்கு வலியுறுத்துகிறார். தேவனிடத்தில் அனுகுவதற்கு இதை தவிர வேறு வழி இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறார். தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெறுவதற்காக மட்டும் அல்ல அவர் ஏற்றக் காலத்தில் நம்மை உயர்த்துவதற்கும் அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கி இருக்கவேண்டும் என்று பேதுரு குறிப்பிடுகிறார் - 1பேது 5:5,6.

## 2.மனத்தாழ்மை, சாந்தம் என்ற வார்த்தைகள் வசனங்களில் பரஸ்பரமாக மாற்றி பயன்படுத்தப்பட்டாலும், இவைகளுக்குள் உண்டான சரியான வித்தியாசம் என்ன?

**R 2585 [col. 293]:**

ஆவியில் எளிமை என்பதற்கும் பொருளாதாரத்தில் எளிமை என்பதற்கும் குறிப்பான வித்தியாசம் உண்டு. பூமிக்குரிய காரியத்தில் எளிமையாக இருப்போர் ஆவிக்குரிய விஷயத்தில் பெருமையாக இருக்கும் அநேகரை கண்டிருக்கலாம். ஆனால் நம்முடைய பொருளாதாரமோ, நம்முடைய அறிவை சார்ந்த தாலந்துகளோ அல்லது மற்ற எந்தக் காரியமோ, தெய்வீக பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படும் காரியங்கள் அல்லது

அங்கிகரிப்பை பெறும் காரியங்கள் மட்டுமே மனத்தாழ்மையில் நடப்பிக்கும் காரியங்களாகும். பரத்திலிருந்து ஞானத்தை பெறும் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட மனநிலை அவசியம் தேவைப்படுகிறது. இவர்கள் ஒவ்வொரு நொடியிலும், தங்களுக்குண்டான எல்லா குறைவுகளையும், மனத்தாழ்மையோடு உணரவேண்டும். இல்லா விட்டால் இக்காலத்தில், தேவன் கிருபையாக அளிக்க விரும்பும் ஞானத்தையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாக பெறமுடியாது. மேலும், ஆரோக்கியமான இருதயத்தைப் பெறுவதற்கு, மனத்தாழ்மையுள்ள மனதே அடிப்படையாக தேவைப்படுகிறது. ஆகவே ஒருவர் நீதியாக சிந்திக்கும் மனநிலையில் இருந்தால், அவர் நிச்சயமாக மனத்தாழ்மையுள்ளவராக இருப்பார். எனவே நாம் கிறிஸ்துவின் சிந்தயை பெறுவதற்கு முதலில் மனத்தாழ்மையாக இருக்கவேண்டும்.

**R2586 [col. 1P2]:**

மூன்றாவதாக சாந்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று ஆண்டவர் உரைக்கிறார். அல்லது தன்னடக்கம் என்றும் கூறலாம். "தெய்வீக சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பொறுமையாகவும், சாந்தத்தோடும் ஆண்மீக நோக்கங்களை கொண்டிருக்கிறது" என்று இதை குறித்து வெப்ஸ்ட்டர் அகராதி விளக்கம் அளிக்கிறது. பொறுமையோடும், சாந்தத்தோடும் தன்னை தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதற்கும், தங்களுடைய சுயநலத்திற்காக பொறுமையோடு இருப்பதற்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. பட்டியலிலிருக்கும் முதல் குணமாகிய மனத்தாழ்மையைப் பெறாவிட்டால், பொறுமையோடு தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பது கூடாத காரியமாகும். பெறுமையுள்ளவர்களும், சுயநலமானவர்களும் தெய்வீக சட்டத்திற்கு தங்களை கீழ்படுத்துவது இயலாத காரியம். அவர்கள் தங்களை உயர்த்தி, தங்களுடைய நியாயத்தீர்ப்பை (தேவன் அவர்களின் பாவங்களை கிருபையாக மன்னித்ததை) தவறாக பயன்படுத்தி, தெய்வீக பாதுகாப்பின் மேல் உள்ள நம்பிக்கை முற்றிலுமாக அற்றுப்போக தக்கதாக தங்களுடைய நல்மனசாட்சி தவறாக வழிநடத்திவிடுகிறது. ஆனாலும் அவர்கள் மிக சரியான பாதையில் நடப்பதாக எண்ணுகிறார்கள்.

**R1962[col. 1 P 1]:**

மற்ற வார்த்தைகளுக்கு ஆண்டவர் தாமே திறவுகோலை தருகிறார். "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். நான் சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவருமாக இருக்கிறேன்." உண்மையில், இளைபாறுதலுக்குரிய ஆவி - சாந்தமும், அமைதியான இருதயத்திலே தங்கும். நீடிய பொறுமையைக் காத்துக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை பிரியத்தோடு செய்து, அவருடைய நம்பிக்கைக்கும் அன்பிற்கும் பாத்திரமாகி, அவருடைய ஞானத்தின் ஆலோசனைகளில் நடந்து, எல்லா தீமைகளையும் மேற்கொண்டு, சாதகமான சூழ்நிலையிலும், சாதகமற்ற சூழ்நிலையிலும் நல்ல சாட்சிகளுடன் வெளிப்படும் பட்சத்தில் நமக்குள்ளிருக்கும் சாந்தம் வளர்ச்சியடையும்.

## 3. சாந்தத்திற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு அல்லது சம்பந்தம் என்ன?

சங் 25:9 "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."

**F97[P2]:**

பரத்திலிருந்து வரும் ஞானத்தை பெற்றுக்கொள்வதற்கு, கேட்கிற காதுகள் மிக

அவசியம், ஆனால் அப்படிப்பட்ட காதுகளை பெறுவதற்கு, இருதயத்தில் தகுதி பெற வேண்டும். தேவையான சாந்த குணம் மிக அவசியம். ஒருவேளை நாம் மிகவும் மேன்மையுள்ளவர்கள் என்று எண்ணினால், தெய்வீக பார்வையிலிருந்து நம்முடைய பலவீனங்களையும் அபாத்திரமான நிலையையும் உணருவதற்கு தவறிவிடுவோம். நாம் உண்மையில் யார் - என்பதை மனத்தாழ்மையோடு ஒப்புக்கொள்ள, நேர்மையான இருதயம் தேவைப்படுகிறது. இந்தக் கோணத்திலிருந்து நாம் பார்க்கும்போது நீதியின் மேல் வாஞ்சையுள்ளவர்களாக தேவனோடு ஐக்கியப்பட விரும்புவோருக்கு, ஆண்டவராம் இயேசு இரட்சகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆயினும், துவக்கத்தில் இதை அநேகர் புரிந்துக்கொள்வதில்லை. முதலில் நாம் அனைவரும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம் என்பதை அறிந்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் நீதியான பலியை தேவன் நமக்காக ஏற்றுக்கொண்டார். இப்படியாக, அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம், அவருடைய கீழ்படிதலினால் பிதாவாகிய தேவன் நம்மை ஏற்றுக்கொண்டார். நம்முடைய பாவங்களை அவர் சுமந்ததினால், நாம் நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டோம். இவ்வாறாக, இயேசு நமக்காக ஞானமும், நீதியும் மீட்புமானார். நாம் இந்த அறிவை பயன்படுத்துவதற்குமுன், தேவனுக்கு முன்பாக மனதார கிறிஸ்துவின் ஈடுபலியினால் நாம் நீதிமானாக்கப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சுத்திகரிக்கப்படவேண்டும். தொடர்ந்து நாம் வளர்ச்சியடையும்போது, நாம் முழுமையாக மீட்கப்பட்டு மகிமையடைவோம். இப்படியாக, நாம் வளர்ச்சியடையும் பட்சத்தில் எந்த நிலையிலும் இயேசுவின் ஞானம் நம்மைவிட்டு விலக முடியாது. நம்முடைய ஓட்டத்தின் இறுதி வரைக்கும் அவர் நம்முடைய ஆலோசனை கர்த்தராக இருக்கவேண்டும். அவருடைய வழிநடத்துதலின் கீழ் நாம் நம்மை முழுமையாக தத்தம் செய்வதற்கும், அதற்குப்பின் அந்த ஞானத்தின் மூலம் நாம் முழுமையாக சுத்திகரிக்கப்பட்டு தேவனுடைய சித்தத்தைச் செய்யவேண்டும். பரலோக பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முக்கியமாக பரத்திலிருந்து வரும் ஞானத்தை நாம் பயன்படுத்துகிறோம். “பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது” என்று யாக்கோபு அந்த ஞானத்தை குறித்து விவரிக்கிறார். (யாக் 3:17) உலக ஞானம் சுயநலத்திற்காகவும், சுயசித்தத்திற்காகவும், சுயநீதிக்காகவும், சுயமேன்மைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இவைகள் கசப்பான பொறாமையையும், பகையையும் வருவிக்கும் என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். ஏனெனில் இது உலகத்திலிருக்கும் சாத்தானால் உண்டானவைகள். ஆனால் பரத்திலிருந்து வரும் ஞானமோ இதற்கு எதிரிடையானது. தெய்வீக அன்பை கொண்டதும், சுயநலமற்றதும், பெருமைக்கொள்ளாததும், அநீதியில் மகிழாமல், சத்தியத்தில் மகிழக்கூடியதாகவும் இருக்கிறது.

**R 2250 [col. 2 P 2]:**

“நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்” ஆசீர்வதிக்கப்பட்ட இந்த வசனம் யாருக்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது? நிச்சயமாக தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை வகுப்பாரை தவிர வேறு யாருக்கும் இது குறிப்பிடப்படவில்லை. சபை மட்டுமே இக்காலத்தில் “ஆவியில் எளிமையுள்ளவர்களாகவும்”, “சாந்த குணமுடையவர்களாகவும்” இருக்கிறார்கள். இக்காலத்தில் இவர்கள் மட்டுமே நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களும், ஒவ்வொரு பாடத்திலும் உள்ள தெய்வீக வெளிப்படுத்துதலை ஆர்வத்துடன் தேடுபவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு ஏதோ நீதியின் மேல் கொஞ்சம் தாகம் இருக்கலாம்.

ஆனால் இவர்கள் வெகு சீக்கிரத்தில் திருப்தியடைகிறார்கள். விசேஷமாக, பிரபலமில்லாத சத்தியங்கள் மிகவும் சுவையுள்ளதாக இருந்தாலும், அதற்குப் பின் வரும் உபத்திரவங்களும், சாதகமற்ற உலக நிலைகளும் அவர்களால் மேற்கொள்ள முடிவதில்லை. துவக்கத்தில் இவைகளை பெற்றுக்கொள்ள போதுமான அளவு நேர்மையும் உண்மையும் இருந்தால் போதும். அதே சமயத்தில் இதனிமித்தமாக வரும் உபத்திரவங்களையும் துன்பங்களையும் இவர்களால் சகிக்கமுடியாத பட்சத்தில் அவர்கள் இருக்கும் நிலையில் இருந்துவிடுவார்கள். ஆனால் சிறு மந்தை மட்டுமே இவைகளை ஜெயித்து, முடிவு பரியந்தமும் நிலைத்து நிற்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் மட்டுமே முழுமையாக திருப்தியடைவார்கள். வெகு சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதலில் அழிவுள்ள மனுஷன் அழியாமையை தரித்துக்கொள்ளும் போது அதாவது மாம்ச சரீரம் ஆவிக்குரிய சரீரமாக மாற்றப்படும் போது இவர்கள் முழுமையாக திருப்தியடைவார்கள். அதுவரையில் குறைவாக பெற்றிருந்த ஞானமும், நீதியும், பரிபூரணப்படும். ஆனால் இக்காலத்திலும் இந்த வகுப்பார் அபரிவிதமான சத்திய ஞானத்திலும், அதிகபட்சமான ஆசீர்வாதங்களையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். மற்ற எந்த வகுப்பாருக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கவில்லை.

**R2860 [col. 2 P 1]:**

சாந்தத்தை பொறுத்தவரையில், ஆண்டவரோடு உடன்படிக்கை செய்த ஜனங்களுக்கு ஒரு பாடம் அமைந்துள்ளது. நாம் சாந்தமான மனநிலையில் இருந்தால் மட்டுமே தெய்வீகத் திட்டத்தின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும் உயரத்தையும் அறிந்துக்கொள்ளமுடியும். ஆகவே பெருமையுள்ளவர்களை தேவன் எதிர்க்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். எனவே, நாம் தராசில் ஒட்டியிருக்கும் தூசி என்பதை மறந்துவிடக்கூடாது. "என்னுடைய மேன்மையான இடம், என்னுடைய இரட்சகரின் பாதமே, அவருடைய பணியை தவிர வேறு எந்தக் காரியமும் என் வாழ்க்கையில் சந்தோஷத்தை தருவதில்லை." என்ற சிந்தை நமக்குள் இருக்கவேண்டும்.

**R 3511[col.1P6]:**

மனத்தாழ்மையுள்ளவர்களும், சாந்தகுணமுடையவர்களும், தன்னடக்கமுள்ளவர்களும் பாக்கியவான்கள். இவர்கள் இராஜ்யத்தைக் குறித்த நன்மையான காரியங்களை பெறுவதற்கு மட்டும் தகுதி பெறாமல், ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்றி இராஜ்யத்தில் நல்ல பங்கை பெறுவதற்கும் ஆயத்தப்படுகிறார்கள். பொதுவாக பெருமை தவறானதாக இருந்துகொண்டு, சத்தியத்தோடு அடிக்கடி மோதுகிறது. "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளில் எந்தக் குற்றமும் இல்லை. இந்த வார்த்தைகளில் உள்ள சத்தியத்தின் வல்லமையே விடுதலையை அளிக்கும் மாறாக, கடுமையான வார்த்தைகளோ, கேட்ப்போரை நடுங்க வைக்கும் பிரசங்கங்களோ என்றுமே விடுதலை கொடுக்காது.

## 4. தெய்வீக அரசாங்கத்திற்கு அஸ்திபார கோட்பாடாக சாந்தம் அமைந்துள்ளது என்று நாம் எவ்வாறு அறிந்துக்கொள்வது?

மத் 23:12 - "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."

யாக் 4:6,10 - "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்."

பிலி 2:7-10 - "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.

**E 151[P2]:**

இந்த நாமத்தை பயன்படுத்துவதில் ஒரு முக்கிய காரணம் உண்டு. ஏனெனில் இந்த நாமம் அவருடைய வெற்றியை ஓயாமல் நினைவுப்படுத்துமளவுக்கு மகத்துவமானது. அவருடைய தாழ்மையான கீழ்ப்படிதலினாலும், விசுவாசத்தினாலும், சிலுவையின் மரணபரியந்தம் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்ததினால் இப்படிப்பட்ட மகத்துவமான நாமம் கொடுக்கப்பட்டது. மேலும், மகிமையும், கனமும், வல்லமையும், தெய்வீக சுபாவமும் கொடுக்கப்பட்டது. "மனுஷ குமாரன்" என்ற நாமத்தினால் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் தன்னுடைய பிதாவின் முன்னிலையில் சாந்தத்தின் மாதிரியாக காட்சியளித்தார். அந்தக் குணத்தையே தெய்வீக அரசாங்கத்தின் அஸ்திபாரமாக்கினார். தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். ஆகவே தேவனால் போதிக்கப்பட்டவர்களுக்கும், அவரை மகிமைப்படுத்த விரும்புவோர்களுக்கும், அவருடைய பார்வையில் நன்மையானவைகளை செய்பவர்களுக்கும், இந்த நாமத்தை பயன்படுத்தி விலையேறப்பெற்ற கட்டளைகளின் தொகுப்பு கொடுக்கப்படுகிறது.

**E 423[P1]:**

பிதாவின் சித்தம் நிறைவேற்ற, மனுக்குலத்திற்கு தேவையான மீட்கும் பொருளை கொடுப்பதற்கு, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொண்ட தூதர்களில் பலர் மனம் உவந்து மகிழ்ச்சியோடு முன் வந்திருக்கலாம். ஆனால் இது மிக கொடுரமான சோதனையாக இருந்திருக்கும். தேவன்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை முழுமையாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் நேரிடும். ஆகவே இந்நிலையில் தேவன் மேல் உள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும், பக்தி வைராக்கியத்தையும் வெளிப்படுத்தும், இயேசு - தேவ புத்திரர்களுக்கும் கர்த்தத்துவங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மற்ற நாமங்களை காட்டிலும் மேலான நாமத்தை பெற்றுக்கொள்ள தகுதி அடைந்தார். மேலும், இப்படிப்பட்ட வாய்ப்பை தன்னுடைய சுயநலத்திற்காகவும், சுய விருப்பத்திற்காகவும் செயல்படுத்த விரும்புவோர், நிர்மூலமாக்கப்பட்டு, அழிக்கப்படுவார்கள். (சாத்தானை போல) இதற்கு எதிர் மாறாக பரலோக பிதாவின் சித்தத்திற்கும் திட்டத்திற்கும் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையாக இருப்போரை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துவார் என்பதை எடுத்துகாட்டுவதற்கு இந்தத் தெய்வீக நோக்கம் பயன்படுத்தப்பட்டது. உலகத்தின் மேல் வைத்திருந்த அன்பையும்

இரக்கத்தையும் வெளிப்படுத்த சித்தமானார் என்ற அவருடைய சிறப்பம்சங்கள் முக்கியமான பங்கை பெறும்படிக்கு அவருடைய திட்டத்தை வடிவமைத்தார். மேலும், தன்னுடைய ஒரே பேறான குமாரனை மகிமைப்படுத்த விரும்பிய பரலோக தந்தை அவர் மேல் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

**R 2655[col.1P2-4]:**

விசேஷித்தவிதமாக சாந்த குணம் மற்றும் தன்னடக்கம் உள்ள சிறு மந்தையோடு ஐக்கியப்பட்டபின், ஆட்சியாளர் அல்லது எஜமானனாக இருக்க விரும்பும் ஆண்டவரின் ஒவ்வொரு ஆடும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, பணிந்து இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் தன்னுடைய பாணியில் வலியுறுத்துகிறார். அவருடைய நியாயத்தீர்ப்பு மற்றும் நல்மனசாட்சியை பொறுத்த வரையில் தம்முடைய மந்தையிடமிருந்து இப்படிப்பட்ட குணத்தையே மகிழ்ச்சியோடு எதிர்ப்பார்க்கிறார். இவ்வகையான குணங்களைச் செயலாற்றும் சபை வாக்குவாதங்களுக்கோ, தர்கங்களுக்கோ என்றுமே இடங்கொடாமல், மற்றவர்களின் ஆவிக்குரிய நலனுக்காக என்றுமே மனமிரங்கி, கனிவோடும், ஆர்வத்தோடும் செயலாற்றவேண்டியவர்களாக இருக்கவேண்டும். அப்போது கூடுமான அளவிற்கு பெரும்பான்மையுள்ளவர்களின் எதிர்ப்பார்ப்புகள் திருப்தியடையலாம். இப்படிப்பட்ட ஒருமனப்பாட்டின் நிலையை அடைவது அனைவரின் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான அங்கீகாரமாகும்.

மூப்பராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் மற்றும் சபை ஜனங்கள் அனைவருக்கும் அத்தியாவசியமாக தேவைப்படும் குணம் - சாந்தமே என்று அப்போஸ்தலன் குறிப்பாக எடுத்துக்காட்டுகிறார். “மனத்தாழ்மையை அணிந்துக்கொள்ளுங்கள்” என்ற வாக்கியம் எவ்வளவு அழகாயிருக்கிறது. அதாவது ஒவ்வொரு குணங்களையும் அலங்கரிப்போடு காட்டுவதும் மற்ற எல்லா குணங்களை மூடுவதற்கான வஸ்திரமும் மற்றும் இது பெருமைக்கு எதிராக இருக்கும் மனத்தாழ்மை என்னும் சால்வையாகவும் இருக்கிறது.

அப்போஸ்தலன் தன்னுடைய வாக்குவாதத்தை உறுதிப்படுத்தும் வகையில், நம்முடைய ஆண்டவர் தன்னுடைய மந்தையோடும் மற்றவர்களோடும் தொடர்பு கொள்ளக்கூடிய அடிப்படையான கோட்பாட்டை நமக்கு நினைப்பூட்டுகிறார். பெருமை கொண்டவர்களை அவர் நிராகரிக்கிறார். இந்நாள் வரைக்கும் அவர்களோடு தொடர்புக் கொண்டு, அவர்களை ஆசீர்வதித்திருந்தாலும் அவர்கள் கொண்டுள்ள பெருமை, தேவனிடத்திலிருந்து வரும் காரியங்களை தடுத்து, அவர்களை தேவனிடமிருந்து விலக்கிவிடும். ஏனெனில், பெருமை மற்றும் போராசையின் ஆவியை பெற்றவர்கள் *ஙி* சத்தியத்தையும், ஆவியின் கனிகளையும், மற்ற ஆவியின் கனிகளை வளர்ப்பதற்காகவும் முயற்சிக்காமல் இவைகளை விட்டு நாளுக்கு நாள் விலகி ஓடுவார்கள். “பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.” ஆகவே நாம் தேவனிடத்தில் நெருங்குவதற்கும் அவருடைய கிருபைகளை பெறுவதற்கும் தேவன், மிகவும் விரும்புகிறார். ஆகவே நம்மை அவர் பாராட்டி, வாக்குத்தத்தம் செய்திருக்கும் பரிசை கொடுப்பதற்கு ஆவலாக இருக்கிறார். இவைகளை சுதந்தரிப்பதற்கு சாந்த குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கிறார். ஆகவே தேவன் நம்மை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரங்களில் அடங்கியிருப்போம்.

## 5. மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன?

1 பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள் நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

**R2655 [col. 1P3]:**

விசேஷமாக மூப்பர்கள் மற்றும் சபையோர் அனைவரும் "மனத்தாழ்மையை அணிந்து கொள்ளவேண்டும்" என்று அப்போஸ்தலர் மிக தெளிவாக எச்சரிக்கிறார். நாம் எவ்வளவு நன்மையான குணலட்சனங்களை உடையவர்களாக இருந்தாலும், அவைகளை நாம் பெருமைக்கு எதிராக இருக்கும் மனத்தாழ்மை என்னும் போர்வையினால் முழுமையாக மூடவேண்டும் என்பதை இது மிக அருமையாக காட்டுகிறது.

## 6. மிக அதிகமான அளவில் மனத்தாழ்மையை பெற்றுக்கொள்ள முடியுமா?

**E255 [93]:**

அதிகமான தன்னம்பிக்கை, சுயசிந்தை, மன உறுதி, ஆணவம் கொண்டவர்களை சீர்ப்படுத்துவதற்கு தேவனுடைய சத்தியத்தின் ஆவி பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கையில், எந்தக்காரியங்களையும் செய்ய முடியாத அளவுக்கு தன்னம்பிக்கையற்றவர்களை, ஊக்குவிப்பதற்கும், அதே சத்தியத்தின் ஆவி பயன்படுத்தப்படுகிறது. மனத்தாழ்மையுள்ளவர்களை தேவனுடைய வாக்குறுதிகள் உற்சாகப்படுத்துகிறது. அதிகமான தன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு கீழ்ப்படிதலையும், தன்னடக்கத்தையும், தேவனை பிரியப்படுத்தும் காரியங்களையும் கற்றுக்கொண்டு, ஏற்றகாலத்தில் பயனளிக்கும் படியாகவும் இருக்கிறது. ஆகவே, "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை." (1கொரி 8:2) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆகவே, நாம் வேதாகமத்தை வைத்திருப்பதினாலோ, சபைகள் என்று அழைக்கப்படும் உலக அமைப்புகளில் அங்கத்தினர்களாக இருப்பதினாலோ, மறுரூபமாக்கப்படாமல் கிறிஸ்துவோடு இணைந்து, அவருடைய வார்த்தைகளினால் வரும் தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய, சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின் ஆவியையும், நல்ல சிந்தையையுடைய ஆவியையும், பெற்றால் மட்டுமே நாம் மறுரூபமாக்கப்படுவோம்.

## 7. மனத்தாழ்மை அல்லது சாந்தத்திற்கும் உள்ள எதிரிடையான குணங்கள் என்ன?

1 பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

நீதி 3:34 "இகழ்வோரை அவர் இகழுகிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்."

நீதி 6:16-19 “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன- மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே.”

**R2204[col.1,P5,6]:**

**பரீபூரணமான அன்பு சாந்தமுள்ளது** - “அது தன்னை புகழாது.” தனக்குமுன் எக்காளம் ஊதுவியாது. எந்த நற்கிரியைகளையும் மனுஷரின் பார்வையில் நடத்தப்படாமல் தேவனுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படும். மேலும் தான் பெற்ற ஞானத்தைக் குறித்து பெருமை பாராட்டாது. ஆனால் மனத்தாழ்மையில் பெற்ற ஒவ்வொரு நல்ல குணங்களும், பூரணமான ஈவுகளும் பரலோக பிதாவினிடத்தில் வருகிறதாக இருக்கிறது.

**பூரண அன்பு அடக்கமுள்ள நற்பண்புள்ளது** - பெருமை என்னும் வேரிலிருந்து வளர்ச்சி அடையும் அநேக முரட்டு குணங்களை உடையவர்கள், தங்களை அதிக ஞானமுள்ளர்கள் என்றும், அல்லது மிகுந்த ஐசுவரியவான்கள் என்றும் எண்ணுகிறார்கள். அதேநேரத்தில் அன்பு அடக்கமான பண்போடு, சாந்தத்தையும் சேர்த்து வளர்த்துக்கொள்கிறது. சின்ன சின்ன காரியங்களை அன்போடு செயல்படுத்துவதே சாந்தம் என்று ஒருவர் கூறுகிறார். அதேபோல சின்ன சின்ன காரியங்களில் அன்பாக இருப்பதே பணிவு என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே பண்புள்ள ஒருவர் சகல காரியங்களையும் அன்போடு நடப்பிப்பார்.

**R2060[col. 2, point # 7]:**

இறுமாப்புள்ளவர்கள், தேவனுடைய பிள்ளையாக ஜீவிப்பது என்பது மிக கடினம். தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களின் சுத்திகரிப்பை தடுத்துவிடும். மேலும், தேவனுடைய காரியங்களில் மற்றவர்களுக்கு உதவி செய்வதையும் தடைசெய்யும். ஏனெனில் - “பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார்.” என்று தேவன் தம்முடைய வார்த்தைகளை எச்சரிப்பாக கொடுத்திருக்கிறார்.

தன்னம்பிக்கைக்குப் பதிலாக, தன்னம்பிக்கையற்ற நிலையை ஞானம் நமக்குள் வளர்த்துவிடுகிறது. அது நமக்குள் இருக்கும் பலவீனத்தையும், அபூரணத்தையும் சீர்த்தூக்கி காண்பித்து, ஒவ்வொரு முறையும் தேவனுடைய கிருபை, செயலாற்றும் விதத்தையும் நமக்கு சுட்டிக்காட்டி, நாம் அவர் மேல் வைக்கவேண்டிய நம்பிக்கையையும், விசுவாசத்தையும் அளவிட்டு காண்பிக்கிறது. ஏனெனில் விழுந்துபோன நிலையில் நம்முடைய தீய வழியிலிருந்து நம்மை காத்துக்கொள்ள இதை தவிர வேறு வழியில்லை.

**R2450 [col. 2P3]:**

அநேக தாலந்துப் பெற்ற தேவனுடைய ஜனங்களுக்கு, விசேஷமாக சபைகளில் முக்கிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்களுக்கு - நிறைவை அடைந்து விட்டோம் என்ற உணர்வுகள், தேவையற்ற மனப்போராட்டம் மற்றும் வீணான மகிமை, அனைத்தும் அவர்களை சூழ்ந்து நெருக்கக்கூடிய தீய குணங்களாக இருக்கிறது. ஆகவே மாம்சமான இக்குணங்களுக்கு நாம் மிகவும் எச்சரிப்போடிருக்க வேண்டும். “ஒரு பெருமையுண்டு, அது மற்றவர்களுடைய வெற்றியை மிக எரிச்சலோடு பார்க்கும். தன்னைவிட தாழ்ந்தோரை மிக

ஏளனமாகவும் இகழும். “என்ற சொற்களை நாம் என்றுமே மறந்துவிடக்கூடாது. எந்த விதத்திலும், வகையிலும், அல்லது கோணத்திலும் தேவனுடைய ஜனங்களுக்குள் இருக்கும் பெருமை தேவனுடைய பார்வையில் வெறுப்பும் கோபமும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஆகவே தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெறவிரும்புவோர், இதைகுறித்து மிக எச்சரிப்பாக இருக்கவேண்டும். அவரை பிரியப்படுத்தும்படி தாழ்மையையும், எளிமையான சிந்தையையும், நமக்குள் எப்போதும் காத்துக்கொள்ளவேண்டும் - யாக் 4:6, 1பேது 5:5.

**R3114 [col.2P2]:**

“தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் ” (சங் 24:4) நம்முடைய ஆண்டவருக்கும், அவருடைய ஆவியைப் பெற்ற அனைவருக்கும் பெருமை அருவருக்கக்கூடியதாக இருக்கிறது. இது ஒரு பொல்லாத களையாக இருக்கிறது. இந்தக் களையை நம்முடைய இருதயத்தில் வேரூன்ற விட்டால், நாம் பெற்றுள்ள அனைத்து கிருபைகளையும், வெகு சீக்கிரத்தில் இழந்துவிடுவோம். “நான் மாயையான சிந்தையை வெறுக்கிறேன்” என்று சங்கீதக்காரன் சொன்னதுபோல நம்முடைய மனநிலையும் அப்படியே இருக்கவேண்டும். மனத்தாழ்மை, தன்னடக்கம் மற்றும் சாந்தமுள்ள குணமே நமக்கு அலங்காரமாக காணப்படவேண்டும். ஒருவருடைய தனிப்பட்ட தகுதியை நிதானமாக சீர்த்தூக்கி பார்த்து, பெருமைக்கொள்ளாமல், தன்னுடைய தாலந்துகளை வீண் பெருமைக்காகவும் மகிமைக்காகவும் பயன்படுத்தாமல், நன்மைகளை நடப்பிக்கும் போது கிடைக்கும் சந்தோஷங்களுக்காகவே பயன்படுத்தவேண்டும். தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் மற்றவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியினைப் பொறுத்தவரையில், அடக்கம், நேர்மை மற்றும் உண்மையுமாக இருப்பார்கள். இந்தச் சமுதாயத்தில், இப்படிப்பட்ட ஆவியைப் பெற்றவர்கள் எவ்வளவு ஆறுதலோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள்!

**R3231 [col. 1P1]:**

உலகத்தை முழுமையாக சார்ந்து வாழ்ந்த கோலியாத், பெருமைக்கு மிக சரியான மாதிரியாக இருக்கிறான். பெருமையின் தலைமையில் செயல்படும் உலகத்தின் ஆவியின் மேல், வைத்திருக்கும் அன்பை ஜெயிப்பதே புது சிருஷ்டிக்கு உண்டான கடுமையான சோதனையாகும். உலக பெருமை தேவனுடைய விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் சவாலாக நிற்கிறது. மிக தைரியத்தோடு, ஆண்டவர் மேல் முழு நம்பிக்கை கொண்டவர்கள் இந்த இராட்சதனை ஜெயிக்கலாம். மேலும், இந்த வெற்றி முழுமைப் பெறவேண்டும் என்பது ஒரு முக்கியமான காரியம். அது மீண்டும் எழும்பிவந்து நம்மை கொன்றுப்போடாதபடிக்கு அந்தப் பெருமையை முற்றிலுமாக அழிக்க வேண்டும். ஆற்றின் அண்டையிலிருந்து எடுக்கப்பட்ட கல்லை சரியாக குறிப்பார்த்து அடித்தால் மட்டுமே அந்த இராட்சதன் மரிப்பான். அதாவது தேவனுடைய பார்வையில் பிரியமானதும், ஏற்றுக்கொள்ளப்படும் சத்தியங்களையும், “தேவனிடத்தில் தாழ்மைப்படுகிறவன் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்திக்கொள்கிறவன் தாழ்த்தப்படுவான்” என்ற வாக்குறுதிகளும் மிக சரியாக நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். “தற்புகழ்ச்சி முடிவடையும் இடத்தில், உண்மையான மனத்தாழ்மைத் துவங்கும்” என்று ஒரு பாடகரிகூறியுள்ளார்.

## 8. சாந்தத்திற்கு இயேசுவை மாதிரியாக கொண்டு நாம் என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

பிலி 2:8 “அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.”

**E111 [P1]-E112:**

2. மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டகரமான ஆலோசனைகளை சாத்தான் நம்முடைய ஆண்டவராம் இயேசுவிடம் கூறினான் - ஆலயத்தின் உச்சியிலிருந்து ஜனங்கள் காணும்படி குதித்து, எந்த விதமான சேதமும் இன்றி தப்பித்தால், நிச்சயமாக இவர் ஒரு அதிசயப்பிறவி என்று ஜனங்கள் நம்பி, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வார் என்று கூறினான். ஆனால் இப்படிப்பட்ட யோசனைகள் அனைத்தும், தேவனுடைய தெய்வீக திட்டத்திற்கு முற்றிலும் முரண்பாடானது என்று அறிந்து, நீதியின் கோட்பாடுகளை இயேசு கடைப்பிடித்தார். சாத்தான் தவறாக வசனங்களை பயன்படுத்தினாலும், அவர் கொஞ்சமும் தயங்காமல், தேவனுடைய கிருபைகளை சோதிக்காதபடிக்கு தேவனுடைய வசனங்களைக் கொண்டு சாத்தானை முறியடித்தார். தன்னுடைய நிலையைக் குறித்து அவர் எண்ணாமல், சடுதியில் பதில் அளித்தார். ஏனெனில், அவருடைய தந்தையின் வல்லமையை பற்றி அவர் முழுமையாக அறிந்திருந்தார். தேவன் மேல் வைத்திருக்கும் உண்மையான நம்பிக்கை, தெய்வீக கட்டளையின்றி, எந்த அபாயத்தையும் வருவிக்காது. வீணாக பிதற்றுவதோ, அல்லது மற்றவர்களின் முன்னிலையில் தாங்கள் மெச்சிக்கொள்வதற்காகவோ இவைகள் செய்யப்படவில்லை.

ஆண்டவரின் சகோதரர்களுக்கு இப்படியான சோதனைகள் நிச்சயமாக வரும், அப்பொழுது நம்முடைய இரட்சிப்பின் அதிபதி நமக்கு முன் வைத்து போன பாடங்களை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அதற்காக நாம் தேவையற்ற ஆபத்துகளில் சிக்கிக்கொண்டு, கிறிஸ்துவின் தைரியமான போர்வீரர்கள் என்று நம்மை நாம் மேன்மையாக எண்ணிக்கொள்ளக்கூடாது. “துணிகரமான தீச்செயல்கள்” உலகத்தின் மத்தியில் மட்டும் அல்ல ஆங்காங்கே தேவனுடைய பிள்ளைகள் மத்தியிலும் காணப்படுகிறது. இவைகளை தவிர்க்க தேவனுடைய ஜனங்கள் அதிக தைரியத்தோடே போர்களை நடப்பிக்கவேண்டியதாக இருக்கிறது. உலகம் பாராட்டுவதற்காக வேலை செய்வதல்ல, மாறாக உலகம் பகைப்பதற்காகவும், உபத்திரவப்படுத்துவதற்கான வேலைகளை செய்வதற்கு அழைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அவமானத்தை சகிக்கவும், இகழ்ச்சிகளை தாங்கவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இரட்சிப்பின் அதிபதியை பின்பற்றுபவர்கள் அவருடைய அடிச்சுவடுகளின் படியே நடக்கவேண்டும். இயல்பான மனிதன் ஆச்சரியப்பட்டு, வியப்படையவும் அளவிற்கு மிக பெரிய அற்புதங்களை நடத்தி, மகத்துவமான காரியங்களை செய்வதை காட்டிலும், தேவனுடைய பணிகளின் நிமித்தமாக, வரும் உலகபிரகாரமான அவமானங்களையும், இகழ்ச்சிகளை உதறித் தள்ள நமக்குள் விசேஷித்த தைரியம் தேவைப்படுகிறது.

இடுக்கமான பாதையின் வழியாக செல்பவர்கள் சுயசித்தத்தை எதிர்ப்பதற்கு நடப்பிக்கும் யுத்தமே மிக முக்கியமானதாகும். தங்களுடைய சித்தங்களை பரலோக தந்தையின் விருப்பத்திற்கு முழுமையாக சமர்பித்து, அவைகளை காத்து, தங்களுடைய இருதயத்தை அவைகளை ஆளச்செய்து, கூடுமானால், பூரணமான மனிதனுடைய நியாயமான விருப்பங்களையும், குறிக்கோள்களையும் நசுக்கி, தங்களுடைய சரீரங்களை

ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, தங்களுடைய பூமிக்குரிய சகலவிதமான விருப்பங்களையும் தேவனுக்காகவும் அவருடைய பணிக்காகவும் முற்றிலுமாக பலிசெலுத்தவேண்டும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதி இப்படிப்பட்ட சோதனைகளை ஜெயித்து வெற்றி அடைந்தார், அவருடைய சகோதரர்களும் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிக்கவேண்டும். “தன் ஆவியை அடக்காத மனுஷன் (தன்னுடைய சித்தங்களை தேவனுடைய விருப்பத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்காதவர்கள்) மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்.” அதேபோல, தவறான விசுவாசம் கொண்டு ஆலயத்தின் உச்சியிலிருந்து குதிப்பவர்களும், தேவனுக்காக என்று சொல்லிக்கொண்டு, அவருடைய திட்டத்திற்கு மாறான காரியங்களை நடப்பிப்பவர்களும் இப்படியாகவே இருப்பார்கள். தேவன் மேல் வைக்கும் விசுவாசம், குருட்டுதனமாக எதையும் நம்பி ஏமாறாது. மேலும், தேவனுடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும் குறித்து, வரம்புமீறிய காரியங்களை கற்பனை செய்யாது. மாறாக, இந்த உலகத்தின் காரியங்கள், பிசாசின் தந்திரங்கள் மற்றும் மாம்சத்தை மேற்கொண்டு ஜெயிக்க, தேவனுடைய அற்புதமான விலையேறப்பெற்ற வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து, விசுவாசத்தின் சரியான பாதையில் ஓடி தெய்வீக வார்த்தைகளுக்கு முழுமையாக கீழ்ப்படியச்செய்யும்.

**E423[ P 1]:**

தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக்கொண்ட தூதர்கள் தேவனுடைய சித்தத்தை விசுவாசத்தோடு நடப்பித்து, மனுஷனுக்கு ஈடுபலியாக தங்களை சந்தோஷமாக செலுத்துவதற்கு தங்களை ஒப்புக்கொடுத்திருப்பார்கள் என்பதற்கு சந்தேகமே இல்லை. ஆனால் இப்படிப்பட்ட காரியத்தை செய்வதற்கு சோதனைகளில் உச்சகட்டத்தை எட்டி தேவன் மேல் வைத்த விசுவாசத்தை நிரூபிக்கவேண்டியதாக இருந்தது. மேலும், தங்களுடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு தேடக்கூடியவருக்கு (சாத்தான்) வீழ்ச்சியையும், தங்களையே தாழ்த்தி, பரலோக பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றக்கூடியவர்களை அவர் மிக மேன்மையான நிலைக்கு உயர்த்தக்கூடிய ஒரு தெய்வீக நோக்கம் இதில் அடங்கியிருந்தது. எனவே, இந்தத் தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும், தேவன் இந்த உலகத்தின் மேல் வைத்த அன்பிற்காகவும், இந்தத் தெய்வீக வாய்ப்பை பயன்படுத்தி, தன்னுடைய குமாரனின் கீழ்ப்படிதலையும், அன்பையும், மனத்தாழ்மையையும், இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தி, தன்னுடைய ஒரே பேறான குமாரனை மகிமைப்படுத்தினார்.

**R2201[col. 2 P3,4]:**

“நான் உன்னை கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்கு பங்கில்லை என்ற நம்முடைய ஆண்டவராம் இயேசு கூறினார். இங்கு “கழுவுதல்” என்ற வார்த்தை மனத்தாழ்மையை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு இடங்களிலும், நேரங்களிலும் இந்தக் கோட்பாட்டை, நன்மைக்கு ஏதுவாக கடைப்பிடிக்க வேண்டும். கூடுமானால், சரீர அங்கங்களுக்கு முடிந்த வரைக்கும் தாழ்மையோடு எல்லா வகையான ஊழியங்களையும் செய்யவேண்டும். அவைகளை ஆண்டவருக்கு செய்வதைபோல் செய்யவேண்டும்.

ஆண்டவரின் பணி முடிந்தபின் அவர் அதனுடைய முக்கியத்துவதை விவரித்தார். முதலாவது மனத்தாழ்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அவர் அங்கு செயலாற்றினார். அவருடைய உண்மையான அங்கத்தினர்களுக்கு எவ்வளவு இழிவான தொண்டுகளைச் செய்ய வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை செய்யவேண்டும் என்று காட்டினார். அடுத்து, கால்களை கழுவுவதில் ஒரு மிக பெரிய சத்தியம் அடங்கியிருந்தது . சொல்லப்போனால் ,

ஆண்டவரால் முன்னமே சுத்தகரிக்கப்பட்டவர்கள் அதாவது விசுவாசத்தின் மூலமாக சகலத்திலும் நீதிமானின் நிலையை பெற்றவர்களாக இருந்தாலும், இந்த உலகத்தில் இருக்கும் வரையில் சில மாம்சமான அசுத்தங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். பொதுவாக ஞானஸ்நானம் பெற்று, நீதிமானாக்கப்படும் நிலைமை நீடித்த நாட்களுக்கு தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளப்படவேண்டும். அதாவது ஒவ்வொருவருடைய கால்களும் (நடைகள்) ஜலத்தை அடையாளப்படுத்தும் வசனத்தினால் அடிக்கடி சுத்திகரிக்கப்படவேண்டும். (எபே 5:26) சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களும், ஒருவர் மேல் ஒருவர் கவனமுள்ளவர்களாக தங்களை பரிசுத்தத்திலும், நீதியிலும், காத்துக்கொண்டு, உலகம், சாத்தான் மற்றும் மாம்சத்தினால் வரும் சோதனைகளினால் விழாதபடிக்கு ஒருவருக்கொருவர் தாங்கி, ஜெயிக்க முயற்சிக்க வேண்டும்.

### R2450[col.1P3 and col2P2]:

சடங்காக நடத்தப்பட்ட ஞாபகார்த்தமான இராபோஜனமும், சடங்காக அனுசரிக்கப்பட்ட ஞானஸ்நானமும் ஒரே விதமான முக்கியத்துவம் பெற்றது என்று சில விளக்கம் சொல்லுவதை தவறு என்று நாம் யோசித்தோம். இவைகளுக்குள் எந்த விதமான ஒற்றுமையும் இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திற்கும் தாழ்மை மற்றும் சாந்தத்தின் கோட்பாடுகள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்கு சுத்திகரிப்பு, அல்லது எந்தவித உதவிகள் மற்றும் ஆலோசனைகள் தேவைப்பட்டால், அவர்களின் சகோதரர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த வேலைகளை செய்யகடமைப்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக ஆண்டவரின் ஆவியை பெற்றவர்கள் அவரைப் போலவே மகிழ்ச்சியோடு இக்காரியங்களை நடப்பிப்பார்கள். ஆனால் இப்பணிகளை செய்யும் தேவ ஜனங்கள் முதலாவது தங்களுடைய கால்களை கழுவி சுத்திகரித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்குபின் மற்றவர்களை சுத்திகரிக்க முயற்சிக்கவேண்டும். ஆகவே இயேசு நமக்கொரு மாதிரியின் மூலம் நமக்கு கட்டளைகளை விட்டு சென்றார்.

ஆகவே உண்மையில் இயேசுவை பின்பற்ற விரும்புவோர், அவருக்குள் இருந்த சாந்தம், அமைதல், மனத்தாழ்மை மற்றும் சரீர அங்கத்தினர்களுக்கு ஊழியம் செய்யக்கூடிய மனநிலை - அனைத்தையும் மிக தெளிவாக உணர்ந்து, துல்லியமாகவும் பின்பற்றவேண்டும். இந்த முழு சிந்தனை அவருடைய வார்த்தைகளில் அடங்கியுள்ளது ஶ "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், (இந்த கோட்பாடுகளை வாழ்க்கையின் அனைத்திலும் பொறுத்திக்கொள்ள அறிந்திருந்தால்) இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (யோவான் 13:17)

### R3495[col.2 last P]:

கிணற்றண்டையில் இயேசு அமர்ந்திருக்கையில், தண்ணீர் மொண்டுக் கொள்ள வந்த சமாரிய பெண்ணிடம் இயேசு பேசின காரியங்கள் - சுவிசேஷ யுகத்தின் தெய்வீக சத்தியத்தின் மிக முக்கியமான ஒரு காரியத்தை சுட்டிக்காட்டுகிறது. அநேக சந்தர்பங்களில் நம்முடைய ஆண்டவர் குறிப்பிட்ட காரியங்களை, குறிப்பிட்ட ஜனங்களுக்கு சாதாரணமாக கூறியுள்ளார். அவரை பின்பற்றுபவர்களை இது அதிகமாக ஈர்த்தது. உண்மையில், சுவிசேஷ யுகம் முழுவதிலும் நம்முடைய ஆண்டவரின் கோட்பாடுகள் மிக எளியோரிடத்தில் சொல்லப்பட்டு வந்தது. "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." ஆனால் தேவன் உலகத்தில் இழிவானவர்களையும், விசுவாசத்தின் ஐசுவரியவான்களையும் தெரிந்துக்கொண்டார். ஆகவே தேவனுடைய கிருபையால், இயேசுவின் மூலம் தெய்வீக

சமாதானத்தை அறிந்திருக்கிறோம். எனவே, இந்த உலகத்தின் இழிவான காரியங்களைக் கொண்டு மேன்மையான காரியங்களை சிருஷ்டிக்க நோக்கமாகி, அதன் வழியாக தம்முடைய மகிமையை பிரதிபலிக்கவும், அவரை துதிக்கும் துதி, நித்திய நித்தியமாக கிருபையின் அடையாளமாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொண்டவர்களாக மகிழ்ந்து களிக்கூறுவோம், நம்மை நாம் தாழ்மைப்படுத்துவோம்.

## 9. அப்போஸ்தலர்கள் தாழ்மையான குணத்தைக் கொண்டிருந்தார்களா?

எபே 3:8 "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது."

**R1885 [col. 1 P5]:**

அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் தன்னடக்கத்தோடு தன்னுடைய ஆவிக்குரிய நிலையையும், பலத்தையும் மதிப்பிடுகிறார். புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரமாக அவர் இருந்தபோதிலும் தன்னைதான் அவர் மேன்மையாக எண்ணவில்லை. அவர் தன்னை மிகப் பெரிய அப்போஸ்தலன் என்று நினைக்கவும் இல்லை. தனக்குள் வீண் பெருமையும் கொள்ளவில்லை. மாறாக, மற்ற சபை ஜனங்களுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்தி, மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். அவர் ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, அவருடைய சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினார். (1கொரி 9:27) மேலும், அவர் மற்றவர்கள் முன் நிலையில், கிறிஸ்துவை தேவனுடைய வல்லமை என்றும், தேவனுடைய ஞானம் என்றும் எடுத்துரைத்தார். அவருடைய மீறுதல்களை போக்க, கிறிஸ்துவின் ஈடுபலி மட்டுமே' என்று அறிக்கையிட்டு, அவருடைய மாதிரியை பின்பற்றுவதற்கு நான் அதிகமாக பிரயாசப்படுகிறேன் என்றும் அவர் தாழ்மையாக அறிவித்தார். இப்படியாக, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிக பெரிய தடையான "சுய - திருப்தியை (நம்பிக்கை)" அவருடைய வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட்டார். ஒருவர் ஆவிக்குரிய இலக்கை அடைந்துவிட்டோம் என்று எண்ணி திருப்தியடைந்தால், அந்த நொடிப்பொழுதிலிருந்து அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி குறையத் துவங்கும். கிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய மாதிரியை பூரணமாக பிரதிபலிக்க விரும்பும் உண்மையுள்ளோர் அனைவரும், தங்களுடைய இக்காலத்து முயற்சிகளில் என்றுமே திருப்தியடையமாட்டார்கள். ஆனால் நாம் கிறிஸ்துவை விட்டு நம்முடைய கண்களை எடுத்துவிட்டால் உடனடியாக இந்தக் குணம் நம்மை பற்றிக்கொள்ளும். அப்படிப்பட்ட எண்ணங்கள் நமக்குள் வளரும் பட்சத்தில் நம்முடைய குறைகள் அனைத்தும் மறைந்துவிடும் அல்லது நமக்குள் ஒளிந்துவிடும். மேலும் இருதயத்தில் இருக்கும் பெருமையினால் நம்மை நாமே (புது சிருஷ்டி) தொலைத்து விடுவோம். ஏனெனில், நம்முடைய நன்மையான காரியங்கள் மட்டுமே வெளிப்படுத்த இந்த மாம்சம் முயற்சிக்கும். நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சி அடைவதை குறித்தே நாம் சிந்திக்கவேண்டும். அப்போஸ்தலரை போல், அவர் புரண நிலையை அடைந்திருந்தாலும், அதை அடைந்துவிட்டோம் என்று எண்ணாமல், பின்னானவைகளை விட்டுவிட்டு முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கி தொடருகிறேன் என்று சொல்லியபடி நாமும் அவருடைய மாதிரியை பின்பற்ற வேண்டும். இப்படிப்பட்ட மனநிலை - தேவனுடைய கிருபையை அதிகமாக பெறுவதற்கும், மனத்தாழ்மையுள்ள சிந்தையில் இருப்பதற்கும் வழிவகுத்தது. மேலும் மற்ற சகோதரர்களின் சோர்வுகளிலும், குறைச்சல்களிலும் உதவிச் செய்யும்படி பவுலை தூண்டியது. ஆனால் மேட்டிமையான சிந்தையுள்ளவர்களும், சுய - திருப்தியுள்ளவர்களும், தங்களுடைய கண்களில் இருக்கும்

உத்தரத்தை மறந்துவிட்டு, மற்றவர்கள் கண்ணிலிருக்கும் தூசியை எடுக்க வகைத்தேடுவார்கள்.

**R2826[col. 1P3-5]:**

வேதாகமத்தில் உள்ள மிக அற்புதமான புத்தகத்தை குறிப்பாக எவ்வளவு எளிய முறையில் அப்போஸ்தலன் அறிமுகப்படுத்துகிறார் என்று சற்று கவனியுங்கள். நம்முடைய வேதாகமத்தில் காணப்படுகிறபடி - "திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்" என்று யோவான் எழுதவில்லை. சொல்லப்போனால், இது பரிசுத்தவானும், வேத சாஸ்திரியுமான யோவானுக்கு வெளிப்படுத்தினதாகும். இதன் அடிப்படையில் யோவான் தனக்காக எந்த நற்பெயரையும் எதிர்பார்க்கவில்லை. இந்த வெளிப்பாடு அவருடையதல்ல என்றும் பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததுமான விசேஷம் என்று மிக தெளிவாக குறிப்பிடுகிறார். தன்னை விசேஷித்த வகையில் குறிப்பிடாமல், ஒரு ஊழியக்காரனாக அறிமுகப்படுத்துகிறார். இந்த ஒரு மனநிலை எல்லா அப்போஸ்தலர்களிடமும் காணப்பட்டது. இப்படிப்பட்ட ஜனங்களை மட்டுமே நம்முடைய ஆண்டவர் விசேஷித்த ஊழியக்காரர்களாக அனுப்புகிறார். ஆனால் இன்று இந்தக் கோட்ப்பாடுகளுக்கு முரண்பாடாக, பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், தங்களுக்கு மிக உயர்வான பட்டப் பெயர்களை (ரெவெரெண்டு) சூட்டிக்கொள்கிறார்கள். அதவாது கிறிஸ்துவின் ஆவியை இந்த உலக ஆவி வெகு எளிதில் அவித்துப் போடுகிறது. ஆனால் இதற்கு எதிராக தேவனுடைய ஜனங்கள் பூர்வ பாதையை (எரே 6:16) பக்தி வைராக்கியத்தோடுத் தேடுகிறார்கள். அதேநேரத்தில் இந்த உலக பிரகாரமான உயர்ந்த பட்டப் பெயர்கள் மிக மேன்மையாக தோன்றுகிறது. அவைகள் அனைத்தும் மாயையும், வீண் பெருமைக்குரியதும், வஞ்சிக்கக்கூடியதுமாக இருக்கிறது.

ஆசியா நாடுகளுக்கு கண்காணியாக இருந்த யோவான் தன்னுடைய பெயரோடு மிக பெரிய பட்டப் பெயர்களை இணைத்துக்கொள்வதற்கு பதிலாக, உபத்திரவப்படும் சகல சகோதரர்களோடும், கிறிஸ்துவின் பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு "உங்கள் சகோதரன்" என்று தன்னை அறிமுகப்படுத்தினார். அவர் கிறிஸ்துவின் பங்காளியும், பாடுகளில் அவருடைய சரீரத்தின் ஐக்கியமும், அவருடைய இராஜ்யத்தில் உடன் வேலையாளுமானார், எல்லாவற்றிற்கும் மேலாக மகிமையை அடையும்படிக்கு அவருடைய சீஷர்களின் உபத்திரவங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் உடன் சகோதரரானார். பொதுவாக யோவான் மிகவும் உபத்திரவப்பட்டவர் என்று அனைவரும் அறிந்ததே. வெளிப்படுத்தலின் இந்தக் காட்சிகளை காண்கையில் அவர் மத்தியத் தரைக்கடலில் உள்ள பத்மு என்ற சிறிய தீவில் நாடு கடத்தப்பட்டிருந்தார். அங்கு சலவைகல் சுரங்கத்தில் பணிச்செய்வதற்கு குற்றவாளிகள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். இவர் மிக கஷ்டப்பட்டு வேலைசெய்தார். ஆனால், தேவன் மேல் உள்ள விசுவாசத்தினாலும், இயேசு தான் கிறிஸ்து என்று சாட்சியினாலும், இப்படிப்பட்ட கொடுரமான உபத்திரவத்தையும், வெளிக்காட்டாமல், மிகவும், தன்னடக்கத்தோடு அந்த நாட்களை எளிமையாக கடத்தினார்.

அவர்களுடைய வார்த்தைகளினால் நம்முடைய கவனத்தை திருப்பி, இந்த ஊழியத்தை பெருமைக்காகவும், பூமிக்குரிய நன்மைகளை அல்லது பரிசுகளை பெறவும், வீண் புகழ்ச்சிகாகவும் நடப்பிக்காமல், தேவனுடைய ஊழியக்காரர்களாக அவருடைய சித்தத்தின்படி நடக்க விரும்பி, தங்களை தாங்களே எந்த விதத்திலும் பொருட்படுத்தாமல், சபைக்கு தேவைப்பட்ட காரியங்களில் மட்டுமே தங்களைக் குறித்து சொல்லும் அளவுக்கு

எல்லா அப்போஸ்தலர்களின் எழுத்துக்களில், எளிமையையும், தன்னடக்கத்தையும் நாம் காணலாம். ஆண்டவரின் அனைத்து சீஷர்களும் இந்த விசேஷித்த குணத்தை குறிப்பாக நோக்கவேண்டும். மேலும் இப்படிப்பட்ட குணத்தை உடையவர்களை மட்டுமே அவர் அப்போஸ்தலர்களும், நமக்கு மாதிரிகளுமாக தேர்வுசெய்திருக்கிறார். நாமும் இதற்கு இசைவாக ஆண்டவரின் ஆவியை பெற்றால், இப்படிப்பட்ட குணங்களை நாமும் வெளிப்படுத்துவோம்.

**F210 [P2] through F212 [P1]:**

மற்ற எந்தச் சீஷர்களும் அப்போஸ்தலர்களாக தேர்வு செய்யப்படாமலிருந்தாலும், அனைவரும் ஆண்டவரால் நேசிக்கப்பட்டார்கள். அந்தப் பன்னிருவரும் பொதுவான வேலைகளுக்காக நியமிக்கப்பட்டதினால், சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்கள் அனைவரும் முழுமையாக இரக்கம் பெற்றார்கள். நம்முடைய ஆண்டவர் எதன் அடிப்படையில் இந்தத் தேர்வுகளை செய்தார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவர் செய்த ஜெபத்தின் குறிப்பு நமக்கு ஒரு காரியத்தை தெளிவாக்குகிறது - “நீர் தெரிந்தெடுத்து எனக்கு கொடுத்த உம்முடையவர்கள்.” மீண்டுமாக “நீர் எனக்கு கொடுத்தவர்கள்.” என்று இயேசு ஜெபித்தார். பிதாவாகிய தேவன் எந்த அடிப்படையில் இந்தப் பன்னிரெண்டு பேர்களையும் தேர்வு செய்தார் என்பது நமக்கு அவசியமில்லை. ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி மனத்தாழ்மை என்ற ஒரு குணத்தை அவர்கள் அடிப்படையாக பெற்றிருக்கவேண்டும். மேலும், அவர்கள் செய்த தொழில் மற்றும் அவர்கள் அந்நாள் வரைக்கும் பெற்ற அனுபவங்கள் அவர்களை தாழ்மைப்படுத்தினதுமின்றி, அவர்களுக்கு தேவையான நம்பிக்கையும், உறுதியும், விடாமுயற்சியுள்ள தன்மையையும் உருவாக்கியிருக்கவேண்டும். நிச்சயமாக, இயேசுவை பின்பற்றின மற்றவர்கள் இந்த அளவுக்கு சிறப்பாக செயலாற்றிருக்க முடியாது. பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் காத்திராதபடிக்கு, முன்னதாகவே அந்த பன்னிருவரும் இயேசுவோடு கூட இருந்து அவருடைய செய்திகளைக் கேட்டு, ஏற்றகாலத்தில் நமக்கு தேவனுடைய சகல ஜனங்களுக்கும் தேவனுடைய அற்புதமான வேலைகளை குறித்து சாட்சி கொடுப்பதற்கும், இயேசுவின் மூலம் ஜீவனுள்ள வார்த்தை வெளிப்பட்டதைக் குறித்து அறிவிப்பதற்கும் தேவன் ஆயத்தப்படுத்தினார் - லூக் 17:24,44-48. அப் 10:39-42.

அப்போஸ்தலர்களை பொறுத்தவரையில் தேவனுடைய சொத்துக்களின் மேல் உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். மற்றபடி மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் இவர்கள் மேன்மையுள்ளவர்கள் அல்ல. மேலும் இந்தப் பன்னிருவரும் தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை செயல்படுத்த முழு அதிகாரம் பெற்றிருந்தார்கள். “அனைவரும் சகோதர சகோதரிகளாக இருக்கிறீர்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகரும் குருவுமாக இருக்கிறார் என்பதை இவர்கள் நினைவில் கொள்ளவேண்டியதாக இருந்தது. அவர்களின் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள - அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, சிறுப்பிள்ளைகளை போல மனத்தாழ்மைப்பட்டால் மட்டுமே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியும். இவர்களுக்கு எந்தவிதமான துணைப் பெயர்களும் கொடுக்கப்படவில்லை. ஆனால், இவர்களின் கிரியைகளைக் கண்டு பிதாவை கனப்படுத்தும்படியாக இவர்கள் மந்தைக்கு மாதிரியாக இருக்கவேண்டும். பயன்படுத்தவேண்டிய சூழ்நிலையில் இருந்தார்கள். இவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களுக்கு நல்ல மாதிரிகளாக இருக்கவேண்டும். புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக, திவ்விய சுபாவத்தை தேடுபவர்கள், அழியாமையையும், கனத்தையும் மகிமையையும் அடைவார்கள்.

ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவும், தேவனுக்கு ஊழியம் செய்யவும், சகோதர்களுக்காக ஜீவனை கொடுப்பதற்கும் கடமை பெற்றிருந்தார்கள். சுவிசேஷத்தை பிரஸ்தாபப்படுத்துவதே இவர்களின் விசேஷித்த பணியாக இருந்தது. (ஏசா 61:1.2. லூக்க 4:17-21. மத் 10:5-8. மாற் 3:14-15. லூக் 10:1-17) என்று தீர்க்கதரிசி சொல்லியபடி நம்முடைய போதகருக்குக் கொடுக்கப்பட்ட அபிஷேகத்திற்கு இவர்கள் பங்காளிகளானார்கள். இவர்களுக்கு மட்டும் அல்ல இவர்களுக்குபின் வந்த சகல புது சிருஷ்டிகளுக்கும் இதே அபிஷேகம் கொடுக்கப்படுகிறது.

## 10. ஒரு மூப்பருக்கு மனத்தாழ்மை மிக அவசியமாக இருப்பதற்கான காரணம் என்ன?

1 தீமோ 3:6 “அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது”

**F246[P2]:**

வேலை செய்ய தகுதிப் பெறாதவர், தேவனுடைய வேலையை செய்ய இயலாதவர்கள் அல்லது தகுதி பெறாதவர்கள் என்று வசனங்கள் ஏதும் கூறுவதில்லை. அதே நேரத்தில் கிறிஸ்துவின் ஒவ்வொரு சரீர அங்கத்தினர்களுக்கு உதவி செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் மனத்தாழ்மையோடு தங்களை தான் மேன்மையாக எண்ணாமல், சோம்பேறியாகவும் இராமல், தேவன் கொடுத்த தாலந்துகளின்படி செயல்படவேண்டும். சபைகளில் இப்படிப்பட்டவர்கள் மனத்தாழ்மையோடு மூப்பர்களாகவோ அல்லது முக்கிய பொறுப்புகளையோ செயலாற்றவேண்டும். இரண்டு சகோதரர்கள் சமமான தாலந்துகளை பெற்றிருந்தால், அதில் ஒருவர் ஆர்வத்தோடு முன்னிலை விரும்புவோரும், மற்றவர் தாழ்மையோடு பின்தங்குபவராக இருந்தால், நல்ல சிந்தையில் உள்ள ஞானத்தின் ஆவி, மனத்தாழ்மையுள்ளவரை பாராட்டும். ஆகையால் இப்படிப்பட்டவர் தேவனால் விசேஷித்த விதமாக அவருடைய பணிக்கு அனுமதிக்கப்படவேண்டும்.

**F251 [P2]:**

“நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே” (1தீமோ 5:17,18) என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தின் அடிப்படையில் பெயர் சபைகள் - மற்றவர்களை கட்டுக்குள் வைத்து அதிகாரம் செலுத்தக்கூடிய மூப்பர்களை உருவாக்கி விட்டார்கள். சகோதரர்களுக்கு மத்தியில் ஓர் உயர்வான நிலையை பெறுகிறார்கள். இப்படிப்பட்ட “அதிகாரத்திற்கு உட்படும் காரியங்கள்” வசனங்களுக்கு என்றும் முரண்பாடாக உள்ளது. மூப்பராக நியமிக்கப்பட்ட தீமோத்தேயு அப்போஸ்தலனால் அறிவுறுத்தப்பட்டார் - “முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும், நடத்தவேண்டும் மேலும் கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.” இங்கு சொல்லப்பட்ட காரியங்களில் சர்வாதிகாரமானவைகள் ஏதும் சொல்லப்படவில்லை. மூப்பர்கள் என்று சொல்லப்படுபவர்களிடம் ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும். எல்லா விதத்திலும் மந்தைக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். மூப்பர் அதிகார தோரணையில் இருந்தால்

மந்தையும் அப்படியே வளர்ச்சி அடையும்.அதே நேரத்தில் மூப்பர் மனத் தாழ்மையுள்ளவராக இருந்தால், மந்தையும் அதே குணத்தில் வளர்ச்சி அடையும். மூப்பர்கள் எந்த ஆவியை பெற்றிருக்கிறார்களோ, மந்தையும் அந்த ஆவியை பெறுவார்கள். ஆகவே போதிப்பதிலும், கற்பிப்பதிலும் முதலில் தங்களை மிகவும், தாழ்த்தக்கூடிய மூப்பர்கள் இரட்டிப்பான கனத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள்.

**F278 [P4]:**

பொய் மத குருக்களின் போதனையானது, கிறிஸ்தவர்களை இரண்டாக பிரித்தது. குருக்கள் மற்றும் பாமர ஜனங்கள். அறியாமையில் செயல்படும் அமைப்புகளில் தேவனுடைய சத்தியமாகிய பொக்கிஷங்களின் மேல் இப்படிப்பட்டவர்களின் ஆவியும், அந்திக்கிறிஸ்துவின் ஆவியும், அதிகாரம் செலுத்துவதற்கு சகல விதங்களிலும் முயற்சிக்கும். நம்முடைய தேவன் தனிப்பட்ட முறையில் மூப்பர்களை கவனியாமல், கிறிஸ்துவின் சரீரத்தின் மேல் நோக்கமாக இருக்கிறார். கனத்திற்குரிய விசுவாசமுள்ள மூப்பர்கள் ஆண்டவருக்கும் சபைக்கும் நல்ல ஊழிக்காரர்களாக இருக்க வேண்டும். அவர்களை தேர்வு செய்யும் சபையோர் அவர்களை பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும். தேவனுடைய வார்த்தைகளின் வெளிச்சத்தில் இவர்களின் திறமைகளைப் பற்றியும், கனிகளைப் பற்றியும் நன்கு அறிந்திருக்கவேண்டும். இல்லாவிடில் ஒருவரும் இப்படிப்பட்ட ஸ்தானத்திற்கு நியமிக்கப்படக் கூடாது. எந்த மூப்பருக்கும் தன்னை தான் நியமித்து கொள்ள அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. உண்மையில் ஒருவர் சபையையும் கிறிஸ்துவின் சரீரத்தையும் புறக்கணித்து, தன்னையே எல்லா வற்றிக்கும் மேலாக உயர்த்தி, அனைவரையும் நியாயந்தீர்க்கும் அளவுக்கு தன்னை நினைத்து கொள்பவரை ஒருகாலமும் மூப்பராக நியமிக்கக்கூடாது. மனத்தாழ்மையும், நம்முடைய ஆண்டவரின் சரீரமாகிய சபையின் ஒற்றுமையுமே, ஆராதனைக்கு தேவைப்படும் அடிப்படையான காரியமாகும்.

**F296 [P1,2]: -**

“தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்றார். (லூக்கா 14:11) என்ற வசனம் தேவனுடைய பிரமாணத்தை மிக தெளிவாக காட்டுகிறது. இந்தக் கற்பனையை சபைகள் கட்டாயமாக கடைப்பிடிக்கவேண்டும். இவர்கள் ஒரே சிந்தையாக இருந்து, தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலை நாடவேண்டும். தேவன் மேல் வைராக்கியம் கொண்டு, விசுவாசமுள்ளவர்களை மட்டுமே தேவன் ஊக்குவிப்பவராக இருக்கிறார். “அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன்கையை நீட்டு என்றார், அப்படியே அவன் தன் கையை நீட்டினான், உடனே அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று” (லூக்கா 6:10) “அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.” (மத் 25:21,23) கனம் என்ற ஏணியின் கீழ், பல வழிகள் உண்டு. யார் விரும்பினாலும், தேவனுக்கும், சகோதரர்களுக்கும், சத்தியத்திற்கும் மனமேட்டிமையோடு அல்ல, மனத்தாழ்மையோடு, ஊழியம் செய்யலாம். எந்தவிதமான ஊழியத்திலும், விசுவாசமுள்ளவர்கள் மகிழுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் அதிகதிகமான வாய்ப்புகளைத் திறப்பார். இப்படியாக, அவருடைய ஞானத்தை எடுத்துக்காட்டும். அவருடைய சித்தத்தை மிக கவனத்தோடு , ஒவ்வொரு புது சிருஷ்டியும் நிறைவேற்ற வேண்டும் . விசேஷமாக

மூப்பர்களை தேர்வு செய்யும் விஷயத்தில், கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருக்கக்கூடியவர் தலையாகிய கிறிஸ்துவின் சித்தத்திற்கேற்ப தன் கைகளை உயர்த்தவேண்டும்.

எவ்வளவு திறமை வாய்ந்தவராக இருந்தாலும் சரி சுயத்தை தேடுபவரை விட்டுவிட்டு, மனத்தாழ்மையுள்ளவரை மட்டுமே நாம் தேர்வு செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். அனைவரின் நலனுக்காக கொடுக்கப்படும் கடிந்துக்கொள்ளுதல், மற்றவர்களை அடக்கும் நோக்கத்துடன் இராமல், மிக மிருதுவாக இருக்கவேண்டும். தகுதிப் பெற்ற ஒரு மூப்பர் சபையின் தலைமையாக தன்னை உயர்த்திக்கொள்பவர் - போதிப்பதற்கு தெய்வீக உரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என்று நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர்கள் சாத்தானின் கண்ணியிலிருந்து தப்பித்து, சீர்ப்பொருந்தும் வரைக்கும் அந்த நிலையிலிருந்து நிராகரிப்பதே, அன்பின் வெளிப்பாடாகும்.

**R3278 [col. P3]:**

இராஜா தன்னுடைய மனத்தாழ்மையை மிக நேர்த்தியாக தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுகிறார்.” நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுப்பிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துக்கொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.” அவர் தேவனுடைய ஜனங்களுக்கு இராஜாவாக இருந்தபோதிலும், அந்நிலைக்கு தன்னை தகுதியற்றவராக கருதினார். இவ்வளவு பெரிய பொறுப்புகளையும், நிர்வாகத்தையும் நிறைவேற்றுவதற்கு தன்னுடைய திறமை போதாது என்று எண்ணினார். தான் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பின்னும், தன்னுடைய பிரஜைகளை “உமது ஜனங்கள்” என்று குறிப்பிடுகிறார். சபையின் மூப்பர்களுக்கு நாம் இங்கு ஒரு சிறிய பாடத்தைச் சொல்ல ஆசிக்கிறோம். பாபிலோன் அமைப்பின் பழக்கத்தின்படி “என் ஜனங்கள்,” “என் சபை” என்று அழைப்போர், உண்மையான மேய்ப்பர்களாக இருக்க வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட வார்த்தைகள் தேவனுக்கு எவ்வளவு எதிரானது என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்கள் இவ்வளவாக தங்களை தாழ்த்தும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எவ்வளவு தாழ்மையில் இருக்கவேண்டும். தேவனுடைய சபை ஜனங்களை என்னுடையவர்கள் என்று கூறுபவர்கள், உண்மையில் மிக ஆபத்தான நிலையில் உள்ளார்கள் என்பதை நாம் புரிந்துக்கொள்ளலாம். மேலும் தலைமையாக இருக்கவிரும்புவர்கள், தங்களை தாங்களே மேன்மையாக எண்ணிக்கொள்பவர்கள் மிகுந்த ஆபத்திற்குள் இருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. இப்படிப்பட்ட மனநிலையில் உள்ளவர்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபித்து, திருத்திக்கொள்ளவேண்டும். இதனிமித்தம் தேவன் அவர்களுடைய தவறுகளை மன்னித்து, மேலும் வரக்கூடிய இடறுதல்களிலிருந்து விடுவிப்பார். மேலும் எந்த விதமான சூழ்நிலைகளிலும் தேவனுடைய மந்தையில் தலைமை வகிக்கக்கூடிய பொறுப்புகளுக்கு எளிதில் இணங்கிவிடக்கூடாது. இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை செலுத்தக்கூடிய மூப்பர்கள் தங்களை கெடுத்துக் கொள்வதோடு மட்டும் அல்ல, தேவன் மந்தைக்கு கொடுத்த சுயாதீனத்தை அனுபவிக்காதபடி, தடுப்பவர்களாக இருப்பார்கள்.

## 11. புருஷர்கள் மனத்தாழ்மை ஏன் செயலாற்ற வேண்டும்?

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து” (எபே 5:25)

**F497[P1]:**

குடும்பத்தில் தலைமை வகிக்கக்கூடிய நபர் குடும்பத்தின் மேல் ஆதீக்கம் செலுத்த அல்ல, மாறாக தன்னுடைய பராமரிப்பின் கீழ் இருக்கும் ஒவ்வொருவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து, வழிநடத்தி, அவர்களை வழிநடத்த தக்க ஆலோசனை கூறவேண்டும். இப்படிப்பட்ட புருஷர்களுக்குள் இருக்கும் அன்பின் ஆவி, மனைவியின் விருப்பு, வெறுப்புகளையும், அவளுடைய நல்ல ஆலோசனையையும் என்றுமே ஒதுக்கிவிடக் கூடாது. ஆதாம் சகல விதமான பரிபூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டபோதும், ஏவாளின் பிரிவினால், சில முக்கிய குணங்களை இழந்துவிடுவோமோ என்ற ஆதாமின் தவிப்பை இவர்களும் நிச்சயமாக உணருவார்கள். தெய்வீக ஏற்பாட்டின் முக்கியத்துவம் குடும்பத்தின் தலைவரிடமிருந்தாலும், நிச்சயமாக சில விசேஷித்த குணங்களை தன் மனைவியிடம் கண்டுணரச் செய்யும். தன்னுடைய சொந்த சிந்தையும் யோசனைகளும், மனைவியினிடத்திலிருக்கும் இசைவான ஆதரவையும் நன்கு உணருவார்கள். ஆகையால், நல்ல சிந்தையுள்ள மனுஷன் தன்னுடைய மனைவியின் உதவியை நாடி, அவளுடைய ஆதரவை அங்கிகரித்து, அவளுடைய நோக்கங்களுக்கு செவிக் கொடுத்து அவளுடைய அன்பை உணர்ந்து அவளை உயர்வாக புரிந்துக்கொள்வார்.

## 12. மனைவிகள் எவ்வாறாக மனத்தாழ்மை காண்பிக்க வேண்டும்?

“மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள், கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.” (எபே 5:22-24)

**F 500[P2]:**

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் - “நான் தேவனுடைய தெய்வீக பிரமாணங்களை மீறினேன். நான் என் புருஷனை மதிக்காததின் நிமித்தம் வெட்கப்படுகிறேன். சகலத்திற்கும் பொறுப்பாளியாக இருக்கவேண்டிய நான் என்னுடைய பங்கை உணர்ந்துவிட்டேன். இனி நான் விசுவாசத்தோடு என் கடமைகளை செய்வேன். என் புருஷன் குறைவுப்படக்கூடிய விஷயத்தில், அவரை ஒரு சிறந்த மனிதனாக நிறுத்தவும், அவருடைய தாலந்துகளைச் சிறப்பாக பயன்படுத்தவும், கர்த்தரிடத்தில் ஜெபிப்பேன். அவரிடத்தில் நான் அதிகமாக அன்பு கூரவும் மரியாதை கொடுக்கவும் முயற்சிப்பேன். என்னுடைய திருமண உடன்படிக்கையின் கீழ், நான் என் கடமையைச் செய்து, விசுவாசத்தோடு தேவனுக்குள் செயல்படுவேன். அவருடைய பலவீனங்களினாலும் குறைவான நியாயத்தீர்ப்பினாலும், இவைகளை நான் மற்றவர்களிடமிருந்து, மறைத்துக்கொள்வேன். இவைகளை என் கணவரிடம் எடுத்துரைக்கையில் என்னுடைய மேன்மையான திறமைகளைக் குறிப்பிடமாட்டேன். குறித்த காலத்தில் அவர் அடையும் தோல்விகளே அவரை சீர்ப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன். ஆயினும் நான் எந்த காரியத்தையும் கட்டாயப்படுத்தாமல், முடிந்த வரைக்கும் ஒரு நல்ல துணைக் காரியங்களை எடுத்துச் சொல்லுவேன். கால போக்கில் அவர் என்னுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிறிஸ்துவும் சபையும் ஐக்கியப்பட்டிருப்பதைபோல நாங்களும் இசைந்து வாழ்வோம் என்று எதிர்பார்க்கிறேன். தெய்வீக ஏற்பாட்டில் மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் எனக்குள்

வளர்த்துக்கொள்வதில் நான் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மனைவியாக இருப்பேன். என்னுடைய முயற்சினால் என்னுடைய கணவர் ஆசீர்வதிக்கப்பட்ட உயர்ந்த நிலையை பெறுவார். இப்படியாக தேவனுடைய கிருபையினால் அவருடைய வார்த்தைகளில் உள்ள கட்டளைகளைப் பின்பற்றி, அப்போஸ்தலர்கள் முன் வைத்த தெய்வீக நிலைக்கு எங்களை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் நெருங்குகிறோம்" என்று ஒரு மனைவி தனக்குள்ளே சொல்லவேண்டும்.

## 13. நம்முடைய பிள்ளைகளுக்கு சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் என்ன?

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்." (செப் 2:3)

**F555[P1]:**

உபத்திரவ காலத்தில் இந்த ஒரே ஒரு வாக்குத்தத்தை உறுதியாக பற்றிக்கொள்ளவேண்டும். இது பொதுவானதாக காணப்படுகிறது. சாந்தமும், அமைதலும், நீதியையும் விரும்பும் அனைவருக்கும் இது பொருந்தும். உடன்படிக்கை செய்தவர்களின் பிள்ளைகளும் இந்த வகுப்பில் உள்ளனர். இவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி சகல கட்டளைகளையும் மிக சரியாக கற்பிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்." (செப் 2:3) என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

**R1963[col. 2P 2-5]:**

புயல் வரும்போது, அனைவரும் பாதுகாப்பைத் தேடுவார்கள். (வெளி 6:15-17) அநேகர் பட்டணங்களுக்கு ஓடிப்போவார்கள். இந்த உலகத்தின் மேல் வரக்கூடிய சகல காரியத்தையும் மேற்கொண்டவர்கள் (லூக் 21:36) உண்மையில் மலைக்கு (தேவனுடைய இராஜ்யம்) ஓடிப்போவார்கள். அங்கு அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். இவர்களை தவிர ஒருவரும் இந்தப் பாதுகாப்பைப் பெற முடியாது. "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே, அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான், இதுவே அவரைத் தேடி விசாரித்து, அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி." (சங் 24:3-6)

ஆனால் தங்களை தான் மறைத்துக் கொள்வதற்கு மனுஷர் எடுக்கும் முயற்சி விருதாவாக இருக்கும். தங்களுடைய பிள்ளைகளை உபத்திரவத்தின் போது மறைத்துக் கொள்வதற்கு பரிசுத்தவான்கள் எந்த முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். சகல பாவங்களைப் போக்கவும், ஒவ்வொரு பொய்யான அமைப்புகளை அழிக்கவும், பொதுவாக முழு மனுக்குலத்திற்கு நன்மையான பாடங்களை கற்பிக்கவும் அவர்களின் இருதயங்களை நொறுக்கவும், இந்த உபத்திரவக் காலம் வருகிறது. நம்முடைய

பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும் இந்தப்பாடங்கள் தேவைப்பட்டால் அதிலிருந்து அவர்கள் தப்புவிப்பதற்கு நாம் முயற்சிக்கக்கூடாது. இந்த உபத்திரவம் அவர்களுக்கு தேவையில்லை என்றால், தங்களுடைய பிள்ளைகளையும், நண்பர்களையும் பாதுகாக்க தேவன் மகிமை அடைந்த சபையை அனுமதிப்பார். மாம்சத்தில் இருக்கும் சபையின் பாதுகாப்பைக் காட்டிலும் மகிமை அடைந்த சபை அதிக வல்லமையாக செயல்படும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான சகல கட்டளைகளையும் எடுத்துக்காட்டுகளின் மூலம் போதித்து, நீதியின் உபதேசங்களை விசுவாசத்தோடு கற்பிக்கவேண்டும்." கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும், யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும். இதனிமித்தம் தேவனுடைய ஞானத்தையும், அன்பையும், நீதியையும் மிக தெளிவாக புரிந்துக்கொள்வார்கள். மேலும் மற்றவர்கள் முன்னிலையில் இப்படிப்பட்ட அன்பிலும் நீதியிலும் நடந்துக்கொள்வார்கள். சாந்தம், அமைதல், பொறுமை போன்ற குணங்களைப் பற்றி அவர்களுக்கு போதிக்கவேண்டும். இறுமாப்பின் பின்விளைவுகளை அறிவிக்கவேண்டும். கொஞ்சத்தில் சந்தோஷமாக இருப்பதற்கு கற்றுக் கொடுக்க வேண்டும். போதும் என்ற மனதோடுக்கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று அவர்களுக்கு கற்பிக்கவேண்டும்.

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்." (செப் 2:3) என்ற வார்த்தைகளை நாம் அவர்களின் நினைவுக்கு கொண்டுவரவேண்டும். உலகத்தின் பொருட்கள் அநித்தியமானவைகள். ஐசுவரியமுள்ளவர்களும் சரி, தரித்தரர்களும் சரி, அனைவரும் துன்மார்க்கமாக நடக்கிறார்கள். (மல் 4:1. யாக் 5:1-6)

உபத்திரவக் காலத்தில் உலக வரலாற்றில் முதல் முறையாக சாந்தம், பொறுமை, அன்பு, கனிவு, இன்னும் மற்ற குணங்களை காண்பது அரிதாக இருக்கும். (உபத்திரவக் காலத்திற்கு முன்னும் பாபிலோனின் வீழ்ச்சிக்கு முன்பாக, திரள் கூட்டத்தார் மேல் வித்தியாசமான உபத்திவரம் வரும். பாபிலோனின் வல்லமை மிகவும் அதிகரித்ததினால் இவர்கள் மிகவும் உபத்திரவப்படுவார்கள். சரீரத்திலும், சிந்தையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்வது மிகுந்த பாக்கியமாக இருப்பதினால், இப்படிப்பட்ட உபத்திரவ நாட்களில் இப்படிப்பட்ட ஊழியங்களை மனப்பூர்வமாக செய்வதற்கு நாம் பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் நல்ல குணங்களில் உறுதியாக இருந்து தேவனோடு விசுவாசத்தில் ஐக்கியப்பட்டு, தங்களுடைய மேன்மையான குணங்களை பிரதிபலிப்பதற்கு நாம் பயிற்சி கொடுக்கவேண்டும்)

**R2021[col. 1P1,2]:**

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்." (செப் 2:3) இதுவே பாதுகாப்பான ஒரே வழி. இந்தக் காலத்தில் தங்களுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு தெரிந்துக்கொள்ளப்படுதலை உறுதிப்படுத்திக்

கொள்பவர்கள் உலகத்தின் மேல் வரும் உபத்திரவங்களுக்குத் தப்பித்துக் கொள்வார்கள். தப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு இதை தவிர வேறு எந்த வழியும் இல்லை. இவ்வாறு செய்வதினால் ஏதோ ஒரு சூழ்நிலையில் காக்கப்படுவார்கள். ஆகவே நமக்காகவும், நம்முடைய பிள்ளைகளுக்காகவும், ஒரு பாதுகாப்பான இடத்தை (அப்படி ஒன்றும் இல்லை) தேடுவதைக் காட்டிலும், இன்று நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நியாயமான கற்பனைகளுக்கு முழு இருதயத்தோடு கீழ்ப்படிந்து நித்திய பாதுகாப்பைப் பெறுவோம்.

## 14. சாந்த குணமுள்ளவர்களுக்கும், மனத்தாழ்மையுள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் என்ன?

## 15. சாந்தம் மற்றும் தாழ்மைக்கு வேதாகமம் கொடுக்கக்கூடிய குறிப்பான எடுத்துக்காட்டுகள் யாவை?

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத் 11:28-30)

"மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான்." (எண்ணா 12:3)

"நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்." (மத் 8:8)

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்; தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைச் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். அதற்குச் சீமோன் பேதுரு : ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என்

கைகளையும் என் தலையையும்கூட கழுவவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார். தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார். அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (யோவா 13:1-17)

**R 2903 [col.2 P2,3]:**

குழந்தையாக இருந்த மோசே கவர்ச்சியாகவும், அழகாகவும் இருந்தபடியினால் "அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்." என்று ஸ்தேவான் கூறுகிறார். (அப் 7:20) யூத வரலாற்று ஆசிரியரான ஜோசபஸ் இவரைக் குறித்து எழுதும் போது - "அவரை வீதியில் தூக்கி சென்றபோது ஜனங்கள் தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு, அவரை கண்சிமிட்டாமல் பார்ப்பார்கள் " என்கிறார். ஆதிகாலத்தில் அவர் தன்னுடைய சாந்தமான பெற்றோரிடம் பெற்ற பயிற்சிகளையும் நாம் கவனிக்கவேண்டும். வருங்கால அரசராக எகிப்தில் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற மோசே, எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கவேண்டும். ஆயினும் "பூமியில் உள்ளவர்களில் மிக சாந்தமான மனுஷன்" என்று அவர் பேர் பெற்றார். மோசே ஜெநிப்பிக்கப்பட்டது முதல் அடிமை தனத்தில் இருக்கும் தன்னுடைய பெற்றோர்களை எண்ணி இப்படிப்பட்ட சாந்தத்தை பெற்றிருக்கக்கூடும். ஏனெனில் அரசர்களின் பிள்ளைகளிடமும், ஆட்சியாளர்களிடமும் இப்படிப்பட்ட குணத்தை காண்பது அரிது. ஆயினும் தேவனுடைய ஜனங்களை வழிநடத்துவதற்காக, மோசே பெற்றிருந்த சாந்த குணம் மிக அவசியமானதாக இருந்தது. நடந்திட்டபடி, மோசே இஸ்ரயேல் ஜனங்களோடு வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணுகையில், தேவனோடு அவர்கள் செய்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய அவர் கானானுக்குள் பிரவேசியாதபடிக்கு தடைசெய்யப்பட்டார். தேவனுடைய நாமத்திற்கு மகிமையை சேர்க்காமல், அந்த அற்புதத்தை தான் செய்வதாக சொல்லி *ஶி* "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ" என்று சொல்லி, கன்மலையை அடித்தார்.

நீண்டகாலம் சாந்தமாக இருப்பதற்கு பயிற்சி பெற்று, மிக உன்னதமான நிலையில் இருந்த அவர், சோதனையை ஜெயித்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் தன்னுடைய வருங்காலத்தை வீணடித்துவிட்டார். இஸ்ரயேலுக்காக தேவன் தேர்வு செய்யப்பட்ட மூப்பர், உண்மையில் பெருமையுள்ளவரும், மனமேட்டிமையுள்ளவருமாக இருந்திருந்தால் எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும். மோசேயைத் தவிர ஒருவராலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை நீடிய பொறுமையோடு சகித்திருக்க முடியாது. இதை அடிப்படையாகக்

கொண்டு தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு முக்கிய பாடம் வைக்கப்பட்டுள்ளது. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு மிக சாந்தமும், தாழ்மையுள்ளவர். மேலும் இயேசுவோடுக்கூட உடன்பங்காளிகளாக ஆகும்படிக்கு இந்த உலகத்திலிருந்து அழைப்பு பெற்று, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருப்பவர்கள், தங்களுடைய தலையாகிய இயேசுவின் தாழ்மையையும், சாந்தத்தையும் பெற்றிருக்கவேண்டும். அப்போது இராஜ்யத்தில் உயர்த்தப்படுவோம் என்ற அப்போஸ்தலரின் எச்சரிப்பை நாம் தொடர்ந்து நினைவில் கொள்ளவேண்டும்.

## 16. இந்த குணங்களை நமக்குள் வளர்த்துக்கொள்ள, தேவையான முறைகளை, ஆலோசனையாக கொடுக்கவும்

**R1962 [col. 11]:**

“என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், நான் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவன் ” சாந்தமும் அமைதலுமான ஆவிக்குள் இவைகள் அடங்கியிருக்கிறது. சாந்தமாக இருக்கவேண்டும் என்றால், பொறுமையையும், தேவனுடைய சித்தத்தை அன்போடு நிறைவேற்ற தேவையான அர்ப்பணிப்பும் நமக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும். சாதகமான சூழ்நிலைகளிலும், பாதகமான சூழ்நிலைகளிலும், தேவனுடைய அன்பில் நம்பிக்கையாக இருந்தால், அவருடைய ஞானத்தினால் வழிநடத்தப்படுவோம்.

**(A)** ஜெபத்தினாலும்

சங்கீதம் 19:12-14 “தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும், துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.”

**(B)** தேவனுடைய வார்த்தைகளில் உள்ள தெய்வீக ஞானத்தையும், அறிவையும், வல்லமையையும் கற்றுகொள்வதினாலும்

சங்கீதம் 8:3.4 “உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.”

1 கொரி 4:7 “அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?”

**(C)** பரிப்பூரண மாதிரியாக இருக்கும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதினாலும்.. ரோமர் 8:29 “தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;”

11 கொரி 3:18 "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்."

## 17. இந்தத் தலைப்புக்கு கூடுதலான மற்ற யோசனைகள் என்ன என்ன? (பரலோக மன்னா மற்றும் புதிய வேதாகமம்)

**R 1920 :**

கர்த்தருக்குள் மேன்மைபாராட்டுங்கள்" (3ம் கேள்வி காண்க)

இந்தப் பாக்கியங்களை நாம் பயன்படுத்தும் பட்சத்தில், நமக்காக குவித்து வைக்கப்பட்டிருக்கும் சகல தெய்வீக கிருபைகளையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். அப்போது உண்மையில் நாம் கர்த்தருக்கு மகிமைப்பாராட்டலாம். இப்படிப்பட்ட ஒரு மேன்மைப் பாராட்டலைக் குறித்துப் பார்ப்போம். "அவரை புரிந்துக்கொண்டு அவரை அறிந்திருப்பதினால் நாம் மேன்மை பாராட்டலாம். "அவரை அறிந்துகொள்வது" என்பதன் பொருள் என்ன ? அவருடைய வார்த்தைகளின் சாட்சிகளின் மேல் நம்முடைய இருதயத்தை வைத்து, ஆண்டவரை நம்முடைய தனிப்பட்ட நண்பராகவும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், உதவியாளருமாக இருப்பதை உணர்வதே தேவனை அறிந்துக்கொள்வதாகும். இப்படியாக நாம் அவருடைய ஆவியோடும், ஐக்கியப்பட்டு, அவருடைய கோட்ப்பாடுகளுக்கும், கிரியைகளுக்கும் பரிட்ச்சையமாகி விடுவோம். - அப்போது நாம் அவரை நன்கு புரிந்துக்கொள்ளலாம். அவருடைய வழிநடத்துதலையும், உதவிகளையும் உணர்ந்துக் கொண்டு நித்தமும் அவரோடுக்கூட அவரோடு நடைப்பயிலலாம். இப்படியாக குறித்த காலத்தில் இந்த உலகத்தில் தேவனுடைய நீதி ஸ்தாபிக்கப்படும் முன் நாம் தேவனுடைய நீதியையும், அன்பின் குணங்களையும் முழுமையாக உணர்ந்துக் கொள்ளலாம். ஆகையால், உண்மையில், தனிப்பட்ட முறையில் நாம் அவரை நன்கு அறிந்து கொண்டவர்களாக இப்போது அவரை மகிமைப்படுத்தலாம்.

இப்படிப்பட்ட தெய்வீக அன்பையும் பராமரிப்பையும் பெற்று, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக. நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை" என்று சங்கீதக்காரன் சொன்ன வசனங்களை நாமும் கூறலாம். (சங்கீதம் 34:1-9)

தேவனுடைய பிள்ளைகளுக்கு எவ்வளவு விலையேறப்பெற்ற அனுபவங்கள்!

நிச்சயமாக பெருமையுள்ள இருதயங்கள் இந்நிலையை அடைய முடியாது. ஏனெனில் "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்." "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேது 5:5-6) ஐசுவரியத்திலும், வல்லமையிலும், ஞானத்திலும் வல்லவர்களாக இருப்போருக்கு இந்தக் கட்டளையைக் கடைப்பிடிப்பதற்கு மிக கடினம். (மத் 19:24-26) பதவிகளிலும், மேன்மையிலும், மனுஷருடைய புகழ்ச்சியிலும் இருந்த பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் இவைகளை பின்பற்றுவதற்கு மிக கடினமாக இருந்தது. ஆபிரகாமின் சந்ததியின் வழிவந்தவர்கள் என்று யூதர்கள் பெருமை கொண்டதினால், முழு இஸ்ரயேல் ஜனங்களும் இதை கடைப்பிடிக்க முடியாமல் போனது. உலக ஞானத்திலும் அறிவிலும் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்த கிரேக்கர்கள் பெருமை கொண்டதினால், இதை கடைப்பிடிக்க முடியவில்லை. ஜாதிகள் மத்தியில் மிகுதியான வல்லமையை பெற்றிருந்த ரோமர்கள் அதில் பெருமை பாராட்டினதினால் இதை கடைப்பிடிக்க முடியவில்லை. அதேபோல இன்றையநாட்களிலும், பெருமையுள்ளவர்கள் இந்தக் கற்பனையை கடைப்பிடிக்க முடியாது. தங்களுடைய மதங்களைப் பற்றிய பெருமையில் இருப்போரும், விஞ்ஞானத்திலும், தத்துவ ஞானத்தில் அதிக ஞானத்தை பெற்றோர், புதிதான காரியங்களை கண்டுப்பிடிப்போர், அவர்களை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்புவோர்களுக்கும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள சத்தியங்களைக் காட்டிலும், மனுஷரையும் அவர்களின் மேன்மைகளை மதிப்பவர்கள் தேவனுடைய இந்தக் கட்டளைகளை கடைப்பிடிப்பது கூடாத காரியமாகும். இக்கால வாழ்க்கையில் ஐசுவரியவான்களாக இருப்பவர்களும், ஐசுவரியவான்களாக இருப்பதற்கு விருப்பமுள்ளவர்களும் விசேஷமாக தங்கள் பேரில் நல்ல அபிப்பிராயம் உள்ளவர்கள், தேவனுடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருக்க முடியாது. உண்மையில், ஒவ்வொருவரும் சத்தியத்தின் அறிவை பெறுவதற்கு எதிர்நோக்கும் மிக கடுமையான யுத்தத்தை பற்றி அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள், ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலி 2:12-13)

தேவனுடைய கிருபையே போதுமானது என்று அறிந்துக்கொள்ள கடுமையாக முயற்சித்தவர்கள் மிக சிலராக இருக்கிறார்கள். ஏனெனில் சிலுவையைப் பற்றிய சத்தியம் உலகத்தாருக்கு பயித்தியமாக இருக்கிறது. தங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு அவர்கள் மனதை செலுத்துவதில்லை.

இதன் காரணத்தினால், "ஞானிகள் அல்லாதவர்களும், வல்லவர்களாக இராதவர்களும், மேன்மையுள்ளவர் இல்லாதவர்களும், தேவனுடைய இராஜ்யத்தில் ஆண்டவருடைய மகிமையில் பங்கெடுப்பதற்காக அழைப்பு பெற்றிருக்கிறோம். இக்காலத்து வாழ்க்கையில் அமிழ்ந்திருப்பவர்கள் ஆண்டவரின் அழைப்பை அசட்டை செய்கிறார்கள். அந்த அழைப்பிற்கு செவிச்சாய்த்து கீழ்ப்படிந்து இடுக்கமான பாதையில்

பிரவேசித்து, தேவனுடைய வழிநடத்துதலினால் பலிசெலுத்தும் அளவுக்கு அவர்களால் தங்களை தாழ்த்தி கொள்ள முடியவில்லை. “எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமா-யெண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்குமுன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.” (1கொரி 1:26-29) மனத்தாழ்மையுள்ள தேவ ஜனங்களின் கரங்களில் உள்ள வல்லமையான சத்தியங்களைப் பார்த்து ஞானவான்களும் குழப்பமடைகிறார்கள். நூற்றாண்டுகளாக வளர்ச்சி அடைந்த அமைப்புகளில் இப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக தடுமாறுகிறார்கள். மேலும், “ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறந்துபோகும் என்று ஆண்டவர்” (ஏசா 29:14) என்று அனைவருக்கும் அதிகதிகமாக தெளிவாக நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அவருடைய பிரமாண்டமான வேலைகளை செய்வதற்கு தேவன் பலவீன-முள்ளவர்களை ஏன் தெரிந்துக்கொண்டார்? திறமையுள்ள நாவைகளையும், ஆயத்தமாக இருக்கக்கூடியவர்களின் பேனாக்களையும், மிக சிறப்பானவர்களையும் தேவன் ஏன் பயன்படுத்தவில்லை என்பதன் சரியான காரணத்தை பவுல் கூறுகிறார் ஸ்ரீ“மாம்சமான யாவரும் தேவனுக்குமுன் பெருமை பாராட்டதபடிக்கு இப்படிசெய்தார்.” பூமியில் பாவத்தை போக்கி, நீதியை ஸ்தாபிப்பதற்கான மிக சிறப்பான தேவனுடைய வேலையை செய்ய, மனித வல்லமை என்றுமே உதவாது. ஆயினும், அவருடைய விருப்பத்தின்படி செயல்படக்கூடியவர்களின் வழியாக தம்முடைய வல்லமையைச் செயல்படுத்த தேவன் பிரியமுள்ளவராக இருக்கிறார். மனமேட்டிமையும், பெருமையுள்ளவர்களின் வழியாக நம்முடைய ஆவியை கொண்டு தேவன் அற்புதமான காரியங்களை நடப்பித்தால், அவர்களின் பெருமையும், மேட்டிமையும் இன்னும் அதிகரித்து, தேவனுக்கு சேரவேண்டிய மகிமையை அவர்கள் சொந்த மாக்கிகொள்வார்கள். மிக எளிமையான கருவியையும் தேவன் பயன்படுத்துவார் அதாவது மிக குறைவான தாலந்து உள்ளவர்களையும், அவருடைய பணியைச் சிறப்பாக செய்ய தேவன் உயர்த்துவார். அதே நேரத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை நாம் உயர்த்தும் பட்சத்தில், வீண் மகிமையும் பெருமையும் நமக்கு சாபத்தை வருவிக்கும். இதுவே மனித இயல்பு இந்தப் பலவீனத்தை எதிராளியாகிய சாத்தான் மிக தந்திரமாக பயன்படுத்துகிறான். வசதியில் எளிமையானோர், அறிவிலும் படிப்பிலும் குறைவுள்ளோர், இன்னும் தெய்வீக வார்த்தைகளில் உள்ள கட்டளைகளைப் பெறுவதில் குறைவுப்படுவோரும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தடுமாறி விழுவதற்கு வாய்ப்புண்டு. “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்” என்ற ஆண்டவரின் வார்த்தைகளை மறந்து விடுகிறார்கள். (லூக் 6:20; மத் 5:3) அறியாமையில் உள்ளவர்களும், நன்கு படித்தவர்களும், வசதியுள்ளவர்களும், எளிமையானவர்களும் “தங்களுடைய மாம்ச சிந்தையில் மேன்மை பாராட்டலாம். தான் ஒன்றும் இல்லாதவனாக இருந்து தன்னை ஒரு பொருட்டாக எண்ணிக் கொண்டு தன்னை தான் வஞ்சித்து கொள்பவனை பார்ப்பதற்கு பரிதாபமாக உள்ளது. (கலா 6:3) மொத்தத்தில் கிறிஸ்துவின் சாயல் இல்லாத எளியோரும் சரி, வசதியானவர்களும் சரி, இருவருமே தாழ்மையிலும்,

சாந்தத்திலும் வளர்ச்சி அடையவேண்டும். அதே போல சத்தியத்தின் அறிவை அதிகமாக பெற்றிருந்தாலும் அந்த சத்தியத்தினால் நம்மை சுத்திகரித்து தாழ்மைப்படவேண்டும். (எபே 4:2, 11தீமோ 2:25)

எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய சாந்தத்தையும் அமைதலையும் காத்து கொள்ளவேண்டும். நம்முடைய கண்களுக்கு நாம் மிக சிறியவர்களாக தோன்றினால் மட்டுமே நமக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படாதபடிக்கு தேவன் நம்மை பயன்படுத்த முடியும். விசுவாசத்தின் ஒவ்வொரு சோதனைகளுக்கும் தேவன் பாதுகாப்பளிப்பதில்லை. ஆகவே இன்று தேவன் உங்களை சற்று உயர்த்தி, அவருடைய ஊழியத்தில் ஒரு சின்ன வெற்றியைக் கொடுத்தால், உங்களுடைய தகுதியற்ற நிலையை உணர்ந்து மனத்தாழ்மையோட அந்த வெற்றியைப் பெற்று கொள்ளுங்கள். நம்மை ஊக்குவிப்பதற்காக தேவன் நமக்கு வெற்றி அளித்தார் என்று எண்ணிக்கொண்டு நாளைய தினம் நீங்கள் பெறப்போகிற வெற்றிக்காக இன்றைய தினத்திலிருந்து, கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள். அப்போது உங்கள் குணங்கள் சரியாக வளர்ச்சி அடையும். நேற்றைய தினத்தில் நீங்கள் பெற்ற வெற்றியினால், இன்று நீங்கள் பெருமை கொள்ளாதபடிக்கு எச்சரிப்பாக இருங்கள். நீங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் சரியாக வளர்ச்சிக் காட்டவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நாம் எவ்வளவு சத்தியத்தை பெற்றிருந்தாலும் சரி, நம்மில் தாழ்மை இல்லாவிட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. ஆகவே அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவங்களை நாமும் பெற்றுக்கொள்வோம். “என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன், தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.” (பிலி 4:11-13)

தேவன் தம்முடைய ஜனங்களை வழிநடத்துகையில் பெருமை மற்றும் தன்னம்பிக்கை, சுய திருப்தி போன்ற குணங்களுக்கு எதிராக எந்நேரமும் பாதுகாத்திருக்கிறார். இஸ்ரயேலரை தம்முடைய சொந்த ஜனமாக தேர்வு செய்த பின் 400 வருடங்கள் அவர்களை அடிமைகளாக அனுமதித்தார். அதற்குப்பின் அவருடைய பலத்த கரத்தினால் அவர்கள் அனைவரையும் வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு அழைத்து சென்றார். தேர்வு செய்யப்பட்ட இரட்சகராகிய மோசேயும், மிக தாழ்மையுள்ளவராக இருந்தார். அவர் திக்கு வாயனாக இருந்தபடியால் அவருக்கு உதவியாக ஆரோன் அனுப்பட்டார். மேலும் மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள்ளிலிருந்து “பவுலை விடுவிக்க தேவனுக்கு மனதில்லாதிருந்தது. மூன்று முறை தேவனை நோக்கி ஜெபித்தாலும் - “என் கிருபை உனக்கு போதும்” என்று தேவன் பதில் அளித்தார். (அபூரணமான பாத்திரத்தின் வழியாக தேவனுடைய வல்லமை செயல்பட்டால், மனுஷருக்கு முன்பாக தேவனுடைய பலம் வெளிப்படுத்தப்படும். அதே நேரத்தில் பூரணமானவர்களின் வழியாக தேவனுடைய வல்லமை செயல்பட்டால் அவருடைய வல்லமை முழுமையாக வெளிப்பட வாய்ப்புகள் இராது.

**R2228[col. 1P3]:**

(8ம் கேள்வியை காண்க)

ஆவியில் மனத்தாழ்மையுள்ள காரியத்தை நம்முடைய ஆண்டவராகிய இயேசு எவ்வாறு நடைமுறைப்படுத்தினார் என்பதையும் இதனிமித்தம் அவர் எவ்வளவாக உயர்த்தப்பட்டார் என்பதையும் அப்போஸ்தலர் சில வார்த்தைகளில் சுருக்கமாக கூறுகிறார். நம்முடைய பாவங்களை அவர் சுமப்பதற்காக அவர் தன்னை தாழ்த்துவதற்கு முன் "தேவனாக, அல்லது தேவனைப் போல் இருந்தார்." மகிமையுள்ள ஆவிக்குரிய நிலையில் இருந்தார் இன்னும் அதிக மேன்மையை அடைந்து, சாத்தானைப் போல தனியான ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பாமல், தேவனுக்கு சமமாக இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தேவனுடைய முதல் சிருஷ்டியாக இருந்த அவர் தேவனுடையத் திட்டத்திற்கு இசைவாக, தன்னை தாழ்த்த மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தார். இப்படிப்பட்ட மனத்தாழ்மையோடும், மனவேதனையோடும் அவமானங்களை சகிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் மனுஷ ரூபம் எடுத்தபின்னும் அதே மனத்தாழ்மையில் தொடர்ந்து வாழ்ந்து, தன்னுடைய மனப்பூர்வமான அர்ப்பணிப்பைத் தெரிவித்தார். வாழும்போது மட்டும் அல்ல, மனுஷனுக்காக அவர் ஈடுபலியை செலுத்தி, தேவ திட்டத்தில் ஒவ்வொரு எழுத்தையும் நிறைவேற்றும் அளவுக்கு அவர் தன்னை தாழ்த்தினார். எல்லா விதத்திலும் அந்த மரணம் மிக கொடுமையாகவும், மிகுதியான அவமானங்கள் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும் என்று பிதா பிரியப்பட்டார் என்று அவர் அறிந்தபின் - "ஆண்டவரே என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று தன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார்.

இது வரைக்கும் நடந்த சம்பவங்களில் மனத்தாழ்மைக்கும் சாந்தத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் இதுவே சிறந்த எடுத்துக்காட்டு என்று பவுல் குறிப்பிடுகிறார். இந்த மாதிரியை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

தாழ்மையின் அடிப்படையில் காட்டப்பட்ட பூரணமான கீழ்ப்படிதலினால் பரலோக பிதா அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, தூதர்களுக்கும் மேலாக உள்ள தெய்வீக சுபாவத்தை கொடுத்தார். "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி?"

(9) தேவன் அவரை எல்லாவற்றிருக்கும் மேலாக உயர்த்தினார்.

நம்முடைய ஆண்டவரின் பரிபூரண தாழ்மையும், கீழ்ப்படிதலும், அவருடைய விசுவாசத்தை மட்டும் வெளிப்படுத்தாமல், அவர் வழியாக பிதாவின் அளவற்ற அன்பும் காணப்பட்டது. ஏனெனில் இந்த மனுக்குலத்தை மீட்கும் பணியில், அவர் பிதாவின் அன்பை பகிர்ந்துக் கொண்டார். இதனால் பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய தெய்வீக அதிகாரத்தைப் பெற தகுதியுள்ளவரானார். இப்படியாக இவர் ஆபிரகாமின் சந்ததிக்குத் தலையானார். ஆகவே, ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களை இந்த உலகத்தின் மேல் பொழியும் போது அவர்கள் அனைவரும் சத்தியத்தில் அறிவினால் நிரப்பப்பட்டு, மனப்பூர்வமாக தேவனுடைய சித்தத்திற்கு இசைந்து, நித்திய ஜீவனை பெறுவார்கள்.

மனத்தாழ்மைக்கும், சுயக் கட்டுபாட்டிற்கும், மற்றவர்களின் நன்மைக்காக நடப்பிக்கப்படும் கீழ்ப்படிதலுக்கும் மட்டுமே அப்போஸ்தலர் இயேசுவை நமக்கு முன் மாதிரியாக வைக்காமல், அவர் பெற்ற உயர்ந்த நிலையையும் நமக்கு முன் வைக்கிறார். ஆகவே கீழ்ப்படிதலோடு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், அவரோடு கூட

மகிமையும் அடைவோம். இக்காலத்து உரிமைகளை தேவனுக்கு பிரியமுண்டாக மனப்பூர்வமாக பலி செலுத்தினால், ஏற்ற காலத்தில் அவருடைய நாமத்தை பெற்றுக்கொண்டு சிங்காசனத்திலும், கிரியைகளிலும் பங்கடைந்து அபிஷேகம் பண்ணப்பட்ட சரீர அங்கத்தினர்களாகவும், முழு சபையாகவும் இயேசுவுக்கு பங்காளிகளாவோம்.

(12-16) வசனங்களில் பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபையைப் புகழ்கிறார். அவர்கள் முன்னதாக துவங்கின ஓட்டத்தில், மனத்தாழ்மையையும், கீழ்ப்படிதலையும், தங்களுக்குள் தக்கவைத்துக் கொண்டு, தொடர்ந்து ஓடி பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் மகிமையான இரட்சிப்பையும், கனத்தையும் அழியாமையையும் கிறிஸ்துவுக்குள் பெற்றுக்கொள்ள அவர்களை துரிதப்படுத்துகிறார். நாம் நம்மை நீதிமானாக்குவது இயலாத காரியம். ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக மாற்றப்பட்டு, பரலோக அழைப்பிற்கு அழைக்கப்பட்டு நம்முடைய தெரிந்துக் கொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொண்டவர்களாக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்ட பெரிதான இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டும். ஆண்டவரின் கட்டளைகளை கைக்கொண்டு. நமக்கு முன் அவர் வைத்திருக்கும் மாதிரியை பின்பற்றவேண்டும். நாம் இந்த மாம்சத்தில் அல்ல, ஆவியிலும், சிந்தையிலும், நோக்கத்திலும் இருதயத்திலும் பூரணப்படுவோம். நம்மால் முடிந்த வரைக்கும் நம்முடைய மாம்சத்தை நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் போது அதனுடைய பலவீனங்கள் மற்றும் அபூரண தன்மைகள் பரிசுத்தமான நம்முடைய ஆண்டவரின் நீதியினால் மறைக்கப்படும்.

பாவத்திற்கும், பலவீனங்களுக்கும் எதிரான இந்தப் போராட்டங்கள் நம்முடைய சொந்த போராட்டம் அல்லது, இதற்குத் தேவனே நம்மை அழைத்தினால் அவர் நமக்கு உதவி செய்வார். அவர் நமக்களித்த வாக்குத்தத்தங்களினால் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை வழிநடத்தும்போதே அவர் நமக்குள் கிரியை செய்து-கொண்டிருக்கிறார். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது அவருடைய வார்த்தையின்படி நமக்குள் கிரியை நடப்பித்து தொடர்ந்து வழிநடத்துவார். “சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்.” தேவனுடைய வல்லமையே நம்மை இரட்சிக்கும்” என்ற சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் “இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” (11பேது 1:4)

மேலும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மிக பெரிய பரிசை பெற்றுக்கொள்ள பயணிக்கும்போது, நெருக்கமான பாதையைக் கண்டு நாம் முறுமுறுக்கவும், பிரச்சனைகளை பெரிதாகிக்கொண்டும் இருக்கக்கூடாது. அதேபோல் சோதனைகளிலிருந்து தப்பித்துகொள்ள தெய்வீக வழிகளை விட்டு விட்டு உலகப்பிரகாரமான வழிகளைத் தேடக் கூடாது. ஏனெனில் கிறிஸ்துவின் பள்ளியில் நாம் சிறப்பாக வளர்ச்சி அடைவதற்கு நாம் எப்படிப்பட்ட பரிட்சைகளுக்கும் உட்படவேண்டும் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். இதை உணர்ந்துக் கொண்டு நாம் முடிந்த வரைக்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு, நம்முடைய இருதயத்தில் அதிருப்தியையும், வாய் நிறைய தேவனைப் பற்றி குறைகளையும் கொண்டிருந்தால், நாம் நிச்சயமாக அனுதாபத்தை பெறலாமே தவிற,

பரிசை பெற முடியாது. ஆகவே, "நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டது-மில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்," (பிலி 2:14-16) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

---